உ

# ஆத்ம சிந்தனை விளக்கங்களும் கீதை அமுத ரசமும்

(இரண்டாம் பதிப்பு)

விநாயகர் தருமநிதிய நிறுவனரின்
சிந்தனைத் தொகுப்புகள்

இலவச வெளியீடு : கட 12

நிறுவனர்
**விநாயகர் தரும நிதியம்**
புலோலி மேற்கு, பருத்தித்துறை,
20 - 6 - 1991

39
14
18

ஓம்

# முன்னுரை

எமது 11ம் வெளியீட்டை பார்வையிட்ட பலர் அதற்கு முந்திய வெளியீடுகளையும் தங்கட்கு அனுப்ப வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளனர். எம்மிடம் அவ்வெளியீடுகள் கைவசம் இல்லாமையால் அவைகளில் 3ம், 4ம் வெளியீடுகளை ஒன்ருக்கி மறுபதிப்பு செய்து வெளியிடுகிருேம். இவ்வெளியீடுகள் சம்பந்தமாக தனிநபர்கள், பொது நிறுவனங்கள் தங்கள் கருத்துக்களை எமக்கு தெரிவிக்கும்படி நன்றியுடன் வேண்டுகிருேம். எமது நிறுவனம் பயன்கருதாப் பணியாக உடல் உழைப்பை நல்கி இவ்வெளியீடுகளை வெளியிடுவதில் பெரும் ஆன்மீக மகிழ்ச்சியடைகிறது. இவ் வெளியீடுகளில் குறிப்பிடப்பெற்றவை எமது எண்ணத்திற்கேற்ப சொந்த வாழ்க்கையில் செயல்படுத்தி அனுபவத்தில் கண்ட உண்மைகளாகும். நாம் சிறுவயதில் ஒரு நேர உணவுக்கு கஷ்டமடைந்த நிலையில் உடலுழைப்பால் மூடை சுமந்து சொல்லொணுத கஷ்டங்களை அனுபவித்தும் உண்மை தவறுவதில்லை. கடமையை ஆற்றுவதில் எவ்வித சிரமத்தையும் பொருட்படுத்தாது செயல்பெற்றதால் இன்று உண்மைப் பொருளின் ஒளி விளங்குகிறது. எமது பெயரையோ சுக வாழ்வையோ விரும்பாது கடமையை உணர்ந்து செயல் பெறுகிருேம். எவரும் இதே விதமாக செயல்பெற்ருல் பொருளைத் தேடி அலையவேண்டியதில்லை. எமது சொந்த வாழ்க்கை வரலாற்றை எழுதும்போது இவ் அனுபவத்தின் உண்மை தெரியவரும். எமது வாழ்க்கையில் இலவச சாமான்களை என்றும் வாங்கியது கிடையாது. எமது நிறுவன ஆலை இராணுவ நடவடிக்கையின்போது உடைக்கப்பெற்றும் நாம் எவரிடமும் நஷ்டம் கேட்டதில்லை. எமது கையால் உழையாத பணம் எமக்கு தேவையில்லை. ஆன்மா ஞான ஒளியில் நற்கதி அடைவதே எமது குறிக்கோளாகும். நன்றி.

புலோலி மேற்கு
20-6-1991

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்

# சமர்ப்பணம்

இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தனது சக்தியை எந்நேரமும் உதவிக் கொண்டிருக்கும் உண்மைப் பொருளான சூரிய பகவானுக்கும் (சிவம் அல்லது மெய்ப்பொருள் அல்லது இறைவன்) பூமியை மட்டும் வலம் வந்து குளிர் சக்தியை நல்கிக் கொண்டிருக்கும் சக்திப் பொருளான சந்திர பகவானுக்கும், இவைகட்கு உறுதுணையாக சதா காலமும் சூரிய பகவானை வலம்வரும் அகப் பொருளான அறிவு, நியாயம், நீதி, ஞானம் ஆகிய சக்திகளை ஈந்து கொண்டிருக்கும் குரு, புதன், சனி, செவ்வாய் ஆகிய கிரக பகவான்களும், புறப்பொருளான கல்வி, ஆசை, தொழில் முதலிய சக்திகளைத் தரும் ராகு, வெள்ளி, கேது பகவான்களுக்கும்,

நாம் உருவாவதற்குரிய அணுவளவான விந்தை ஈந்து எம்மை இந்நிலைக்கு ஆளாக்கிய மூதாதையர் வழி தந்தைக்கும்,

அவ்விந்தை கருப்பையில் கட்டி வளர்த்து எமது உடல் உருவாக தமது உடலுழைப்பை நல்கிய அம்மைக்கும்,

தெய்வீகத் தமிழ் மொழியை உருவாக்கி உலகுக்கு அளித்த ஞான மேதாவிகட்கும் அம்மொழி எண்களை தத்துவ சிந்தனையுடன் உருவாக்கி உருவம் அமைத்த முதுபெரும் ஞானமேதாவிகட்கும்,

எமக்கு இவ்வித அகப்பொருள் புறப்பொருள் வளர உதவி செய்து குருவாய் அமைந்த பெரியோர்கட்கும்,

எமது உள்ளம் சரீரம் வளரத் தேவையான உணவுச் சக்தியை அளித்துக் கொண்டிருக்கும் ஓரறிவுள்ள மரம் முதற்கொண்டு ஆறறிவுள்ள மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும்.

எமது உள்ளத்திலுள்ள அறிவுப் பொருளது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதார கமலங்கட்கு இந்நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகிறோம்.

நன்றி.

*வியாபாரி மூலை.*

நிறுவனர்

*விநாயகர் தரும நிதியம்*

ஸ்ரீ

விநாயகர் தரும நிதியம்
புலோலி மேற்கு,
பருத்தித்துறை,

இத்தாபனம் 1990 ஜூலை மாதம் 2-ந் திகதி பிரசித்த நொத்தாரிஸ் பருத்தித்துறை **ச. ரவீந்திரன்** அவர்களால் நிறைவேற்றப் பெற்ற 84-ம் இலக்க தருமசாதனம் மூலம் நடைமுறைப்படுத்தப் பெறுகின்றது.

**இச்சாதனத்தில் குறிக்கப்பெற்ற முக்கிய விபரங்கள் :-**

இத்தாபனத்தின் தொழிலகத்திலிருந்து கிடைக்கப்பெறும் வருமானங்கள் முழுவதும் இப்பகுதி மக்களின் கல்வி, கலை, கலாச்சார வளர்ச்சிக்கும், தமிழ் நூல்களை வெளியிடுவதற்கும் வசதிகுறைந்த சிறுவர், முதியோர், ஊனமுற்றோருக்கான உதவிகளைச் செய்வதற்கும் பயன் படுத்தப்பெறல் வேண்டும்.

நியமிக்கப்பெற்ற தருமகர்த்தாக்கள் இத்தாபனத்தின் தொழிலகத்தைப் பேணிக்காத்து தருமமுறையில் நடத்தப்பெற வேண்டும்.

அவ்விதம் நடத்தமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்படின் தொழிலகத்தை விற்று வரும் பணத்தையும் முதலீட்டுப் பணத்தையும் வங்கியில் சேமிப்புக் கணக்கில் இட்டு அதனுல் கிடைக்கும் வருமானத்தை மட்டும் கொண்டு இப்பணி நடைமுறைப் படுத்தப்பெறல் வேண்டும்.

அவ்விதம் நடத்தமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்படின் இத்தாபனத்தின் சகல சொத்துக்கள், பணங்களையும் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்துவிடல் வேண்டும்,

இத்தாபன ஸ்தாபகரின் மரணத்தின் பின் அவரது உடல் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு ஒப்படைக்கப்பெறல் வேண்டும்.

**இத்தாபன ஸ்தாபகரின் கடைசி வேண்டுகோள் :-**

அவரது இறுதிக்கிரியைகளில் செய்நன்றி மறந்தவர்களான அவரது மனைவி அருள்லட்சுமியும், மகன் விக்கினேசுவரனும் மகள் நிர்மலாதேவியும், அவரது கணவர் க. ஈஸ்வரபாதமும், 2-ம் மகள் இராசேஸ்வரியும், அவரது கணவர் ந. வடிவேல்முருகனும் கலந்துகொள்ள எக்காரணம் கொண்டும் இத்தாபனத்தின் தருமகர்த்தாக்கள் அனுமதிக்கக்கூடாது.

இவர்களின் சந்ததியினர் இத்தாபனத்தின் உறுப்பினர்களாக எக்காலமும் எக்காரணம் கொண்டும் இடம்பெறக் கூடாது.

புலோலி மேற்கு,
09-06-1991

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்

ஈழநாடு, 7-12-90

அவையைச் சபை என்றும் விரிவுபடுத்தலை விஸ்தரிப்பு என்றும் உறுப்பினரை அங்கத்தவர் என்றும் ஒப்புதலை அங்கீகாரம் என்றும் பேராளரை பிரதிநிதி என்றும் போரை யுத்தம் என்றும் அமைதியை சமாதானம் என்றும் எத்தனையோ தமிழ் சொற்களை புறக்கணித்து சமஸ்கிருதத்தை பயன்படுத்துகிறோம்.

வெள்ளையன் விட்டுப்போன இங்கிலீசின் தொல்லை வேறு ''ஈவினிங் பைவ் ஒ குளக்'' என்றும் ''போஸ்ற் ஒவ்விஸ்'' என்றும் ''மீட் பண்ணுவம்'' என்றும் ''டோன்ற் பொகெற்'' என்றும் பேசுகிறான் தமிழன். இப்படிப்பேசுவது இன்று படித்த தமிழனின் இயல்பாகிவிட்டது. பிள்ளைகளுக்கு பெயர் வைப்பதும் தூய தமிழல்லாத பெயர் வைக்கிறார்கள். இனிமேல் வைக்கும் பெயராவது தமிழ் பெயராக இருக்கக் கூடாதா? ஆங்கிலம் படிக்கக் கூடாது என்பதல்ல. எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் தமிழனும் தமிழனும் சந்திக்கும்போது ஆங்கிலத்திலும் ஆங்கிலம் கலந்த அரைகுறைத் தமிழிலும் தான் பேச வேண்டுமா! தமிழன் தன் வரலாற்றுச் சிறப்பை எண்ணித் தலை நிமிர வேண்டும். சுகமாக வாழ வழிதேடுபவர்கள் சுகமாக வாழ்வது என்பதற்குரிய சரியான விளக்கம் புரியாது. தமிழில் விளக்கம் குறைந்த மக்களையும் கிராமப்புற மக்களையும் கஷ்டநிலைக்கு கொண்டு செல்லுகிறார்கள். வாழு வாழவிடு என்றால் உண்மையாய் வாழு. அப்படி வாழ்பவர்களுக்கு வாழ வழிவிடு (இடையூறாய் நில்லாதே) என்பதாகும்.

யாழ்ப்பாணம் சு. மகாலிங்கம்
20-4-90 திசை பத்திரிகை மூலம் எழுதிய கடிதம்:-
(கடமையைப் புறக்கணிக்கும் யாழ்-பல்கலைக்கழகம்)

நமது மொழியில் விஞ்ஞானம் தொழில் நுட்பம் பற்றி எழுதுவதோ வெகு குறைவு. இப்பல்கலைக்கழகம் தமிழ் மொழியில் புதியதுறை வளர்ச்சிகளுக்கு பெருமளவு உதவுமென்ற நியாயமான எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் இப்பல்கலைக்கழக விஞ்ஞான மருத்துவ பீடத்தினர் தம் தாய் மொழியாம் தமிழுக்காற்ற வேண்டிய பணியினை, கடமையினை இயன்றளவும் புறக்கணித்தே வருகின்றனர். தமிழில் தம் கருத்துக்களை வெளிப்படுத்த முடியாத தமிழர்களாகத் தாமிருந்துகொண்டு தம் பட்டதாரி மாணவர்களையும் அந்நிலைக்கு மாற்றுவதில் அப்பீடத்தினர் வெற்றிகரமாக செயற்படுவதாகவே தெரிகிறது. இங்ஙனம் செயற்படும் பல்கலைக்கழகத்தினர் தம்கோபுரங்களிலிருந்து இறங்கிவந்து வெளியிலிருக்கும் அறிவு ஆர்வமிக்கோர் தம் கருத்துக்களை வெளிப்படுத்த ஆவன செய்யவேண்டுமென எதிர்பாக்கிறோம்.

ஒருவன் கள் குடித்தாலும், கொலை புரிந்தாலும், களவு செய்தாலும் நற்றவம் செய்து உய்வு பெறலாம். ஆனால் நன்றி கொன்ற பாவத்துக்கு மட்டும் உய்வு கிடையாது.

— கந்தபுராணம்

✶

உழையாமல் உண்பவன் திருடன், வேலை எதுவுமின்றி உண்டு கொண்டிருப்பவன் திருடன், சோம்பேறியாகி உணவு முத்திரையால் உண்பவன் திருடன், ஏழைகள் நாம் பொருள் தேட வழியில்லை என சோம்பியிருந்து, உழைத்துப் பொருள் தேடுபவனிடமிருந்து தட்டிப் பறிப்பவன் திருடன். உற்பத்தியில் நாட்டமின்றி உழைப்பவனிடமிருந்து பறித்துப் பங்கிடுவதில் மாத்திரம் முயலுபவன் திருடன். உழைத்தே உண்ண வேண்டும் என்ற தத்துவம் ஆழமாக வேரூன்றி விட்டால் வறுமைக்கும் இடமில்லை, வளத்துக்கும் குறைவில்லை.

★

சமத்துவ மனப்பான்மை, சிக்கன வாழ்க்கை, உடலுழைப்பில் ஆர்வம் இவற்றை அனுசரிப்பதன் மூலம் தெய்வீகப் பண்பு நிலையை அடையலாம்.

✶

**தங்களை இருகரம் கூப்பி வேண்டுகிறோம்**

இந்நூல் தங்கள் கையில் கிடைத்ததும் குறைந்தது மூன்று முறை வாசியுங்கள். உங்களுக்கு இதில் புலன் செல்ல வாய்ப்பு இல்லாது போகில் கூடிய விரைவில் உங்கள் சிநேகிதரிடம் இந்நூலை கையளியுங்கள். இன்னும் வாசிக்க வேண்டிய மன எண்ணம் ஏற்படின் ஒன்பது முறை வாசித்த பின் அடுத்தவரிடம் ஒப்படையுங்கள். தங்கள் உதவிக்கு நன்றி.

*புலோலி மேற்கு,*
*30-5-1991*

ஸ்தாபகர்
*விநாயகர் தரும நிதியம்*

சிவமயம்

## சிந்தனை

நான் என்று சொல்லும் இவ்வுருவம் தசை, மனம் இவற்றின் கூட்டுறவே. உடல் என்பது ரத்தமும் எலும்பும் தசையும் சேர்ந்த கூட்டமைப்பு. உயிர் வெறுங்காற்று. ஆத்மா உலக அமைப்பை நடத்தும் பராசக்தியிலிருந்து பறந்த ஒரு பொறி. பரம்பொருள் உண்மைவடிவம். பொருள்கள் உண்மை வடிவம். பொருள்கள் உண்மை நிலையில் ஒன்றோடொன்று தொடர்புடன் உலகம் நடைபெறுகிறது. உண்மை தவறினுல் அந்த அமைப்புக்கு பெரிய இடையூறுகும். ஈசுவர நிர்மாணத்திற்கு விரோதமாகும். பிரகிருதியே உண்மைக்கு மூலாதாரம், பிரகிருதி சுபாவம் மீறி ஒருவன் மனப்பூர்வமாக பொய்பேசி வஞ்சனை, அநீதி செய்தானுனுல் தெய்வத் துரோகியாவான் தேவஅம்சம், மனிதஅம்சம், அசுரஅம்சம் ஆகிய மூன்று அம்சங்களுள் அசுரஅம்சத்தை விருத்தி செய்தவனுகிருன். தெய்வ சிருஷ்டியில் ஒழுங்கீனமும் கலகமும் உண்டாக்குகிருன். உண்மை பேசாதவன் தெய்வத் துரோகியாவான்.

"நீதிநெறி வழுவா மேதினியில் இட்டார் பெரியோர்" என்ருர் ஒளவை. (தெய்வநீதி வேகம் தடையாய் அசுரநீதி வேகம் அதிகரித்து செல்கிறது) மனிதர்கள் குறுக்குவழியில் அசுரநீதியை நாடுவதால் நாடு நகரங்களில் போர் உண்டாகின்றன. மக்கள், மனைகள், நகரங்கள் எல்லாம் அழிக்கப்படுகின்றன. நீதி என்பது மனிதர் தெய்வநீதியை நாடி எல்லோரும் சமம் என்ற நீதிக்கமைய ஒருவர்க்கொருவர் உதவி செய்து வாழுவதேயாகும்.

## கடவுள்

உள்ளத்தைக் கடந்தவர். உனது மனத்தினுள்ளே இருக்கும் ஆத்மா கடவுளிடத்து இருந்து வந்த ஒரு பொறியே. எல்லா மனிதருள்ளும் கடவுள் இருக்கிருர். ஆகவே நீ ஒருவனுக்கு உண்மை நீதி தவறிச்செய்யும் செயல்கள் கடவுளுக்கு எதிரானவையே. நீ எண்ணிய கருமம் தவறென்று ஒருவன் எடுத்துக்காட்டி அது சரியென தோன்றினுல் உன் எண்ணத்தை விட்டுவிடு எந்தக் கடவுளிடத்திலிருந்து பறந்த பொறியில் உண்டானுயோ அதனுள் மறைந்துபோவாய். பஞ்சபூதங்களும் அதனதன் இடத்தை அடைந்துவிடும். அவை பரம்பொருளின் கட்டளைக்கு அடங்கி வேலைசெய்கின்றன.

நிலம், நீர், நெருப்பு காற்று ஆகாயம் இவைகளிலிருந்து ஒவ்வொரு விகிதாசாரம் சேர்ந்தே உன் உடல் உண்டாகியது. எமது தேவார திருவாசக புராணங்கள் மூலம் ஆதியும் அந்தமும் இல்லாத பிரபஞ்சரூபமே கடவுள் என அறிகிறோம். தற்கால விஞ்ஞானமும் செய்மதி மூலம் வியாழனைக் கடந்து யூரானஸ், நெப்ரியூன் இவைகளை செய்மதிமூலம் படம்பிடித்துள்ளார்கள். இவைகளின் தூரம் கற்பனைக்கு எட்டாதவை. இவைகட்கு அப்பாலும் பிரபஞ்சம் கணக்கிட முடியாமல் இருப்பதாகக் கணித்துள்ளார்கள். பூமிக்குரிய சூரியனைப்போல் பன்மடங்கு பெரிய சூரியன்களையுடைய அண்டங்கள் பல இருப்பதைக் கணக்கிட்டுள்ளார்கள். ஆகவே பிரகிருதி கற்பனையில் கூட அளவிடமுடியாதது. (இந்தப் பிரகிருதியில் ஒரு பகுதியாகிய நவகோள்களையுடைய அண்டத்தில் பூமி கோடானுகோடி கோடியில் ஒரு பங்குக்கும் குறைவானதேயாகும் இப்பூமியில் நாம் வசிக்கும் தீவோ நாடு நகரங்களோ கோடானுகோடியில் ஒரு பகுதியே) அதாவது இப்பிரபஞ்சத்தில் எமது நிலப்பரப்புகள் ஒரு அணுவில் கோடானுகோடியில் ஒரு பங்கே. உடலிலுள்ள ஆத்மாவோ பராசக்தியிலிருந்து பறந்துவந்த ஒரு பொறி இப்படியான கற்பனையிலும் அற்பமான ஒரு மனிதன் ஆத்மாவை அறியாமல் ஆணவம அகங்காரம் கொள்வதால் மனித நீதி அசுர நீதியாக மாறுபாடடைகிறது.

சனங்களுக்கு அறிவுறுத்தி அவர்களைத் திருத்து. மனித அம்சத்தை தேவஅம்சமாக்கு. அவர்களுடைய ஆசை தவறாயிருந்தால் அதை நிராகரித்து தருமமாய் நடந்துகொள். உனது சொல்லைக் கேளாமல் மிருகபலம் உபயோகித்து உனக்கு இடையூறு செய்து காரியம் நிறைவேறாதபடி செய்தால், மனவேதனையின்றி சரிவர ஆராய்ந்து நடந்துகொள்ள பேருண்மைகளை உள்ளத்தில் தயாராக வைத்திரு. அதற்காக வருந்தாதே. அவர்கள் செய்யும் இடையூறை உன் மன உறுதிக்கு கருவியாக்கு. முடியாத காரியத்தை நீ செய்யமுடியாது. உனது முயற்சிதான் உனது கடமை. அதைச் செய்தவுடன் உன் எண்ணம் நிறைவேறியது எனலாம். உனக்குள்ள சக்தியை தெய்வம் கொடுத்த கருவியாக உபயோகப்படுத்து. தனியாகவாவது துணைகொண்டாவது நீ செய்யும் எக்கருமமும். உலகத்திற்கு பயன்படுமாறு இருக்கவேண்டும் தன் உள்ளத்தின் நிலையைக் கவனிக்காமல் மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படுகிறவனுக்குச் சுகமில்லை. பராசக்தி உனக்குள்ளும் இருந்துகொண்டு வேலை செய்து வருகிறது. அந்தச் சக்திக்கு இசைய நடந்துகொண்டாயானால் மறைபொருளாய் நிற்கும் பரம்பொருள் உன்னால் ஆகவேண்டியதை எளிதில் உண்டாக்கிக் கொள்ளும்.

எந்த வேலையில் எது நேர்ந்தாலும் எது கிட்டினாலும் அத் தருவாயில் உன் பகுத்தறிவுக்குத் தகுந்த கருமத்தைச் செய்து தருமத்தை நிறைவேற்றுவதே சுகமும் ஆனந்தமுமாக நீ கொள்ளும் வரையில் கஷ்டந்தான் படுவாய். இந்த உடலை நீ என்று எண்ணி மயங்காதே. ஆட்டமும் பாட்டும் வேடிக்கையும் பயனற்றவை என்று தள்ளக் கடவாய். மனிதர்களின் சேமத் தையே கருதுவேனாக. இன்பம் என்பது வெளிப்படகட்டு எவன் இன்பங்களை அதிகமாக நாடுகிறானோ அவன் அநீதி செய்யப் பின்வாங்க மாட்டான். கடவுளிடம் பக்தி கொண் டிருப்பவன் இன்பம் துன்பம் இரண்டையும் சமமாகக் கருது வான். நலம் புரிவதும் தெய்வநீதிக்கு இசைந்து நடப்பதுமே. உன் இயற்கைத் தருமம். உன் செயல்கள் பேச்சுகள் தரும நெறிக்கு மாறுபடாது நீதி வழுவாதிருக்கட்டும். அன்பும் அடக்கமும் கொண்டு பொய்வேஷமின்றி பேசுவாயாக. நாம் வழிபடும் பொருட்களும், விசம், முள், கல் முதலிய துன்பம் தரும் பொருட்களும் பரம்பொருளிலிருந்தே உண்டானவை.

சாந்தி விரும்பினையானால் பல சங்கற்பங்கள் செய்யாதே என்றார் ஒரு முனிவர். செய்ய வேண்டியதை நன்னெறியில் செய்வதே சாந்தியைத் தரும். நமது பேச்சுக்களிலும் செயல் களிலும் பத்தில் ஒன்பது பங்கு யாருக்கும் வேண்டாதவை. அவற்றை நீக்கினால் கவலையும் மனக்கசப்பும் நீங்கும். காலம் வீணாகாது. செயல் சிக்கனத்தோடு எண்ணங்களையும் சிக்கனப் படுத்து. உன் பேச்சுக்களில் தைரியமும் சத்தியமும் பொருந்தி யிருக்க வேண்டும். ஒவ்வொருவன் உள்ளத்திலும் தருமத்தைப் பற்றி நிற்கும் தெய்வம் ஒன்றுண்டு அதை நம்பி செயல்படு பவருக்கு வனமும் வேண்டாம் சுற்றமும் வேண்டாம் புகழும் வேண்டாம். ஞானவாழ்வு நடத்தி வருபவனுக்கு மரணம் எப்ப வரினும் ஒன்றே சந்தோஷமாய் உயிர் நீப்பான். பிறர் செய லும் சொல்லும் என்னவென்று கவலைப்படாமல் கடமையைக் கருதி வாழ்வான். தன் செயலையும் சொல்லையும் எண்ணத்தையும் பிழையறக் காப்பான். தரும வழியில் நில்லாத மற்றவர்களின் ஒப்புதலையும் பாராட்டையும் நாடமாட்டான். உனக்கு உள்ள காலம் குறைவு. அதை வீணாக்காதே ஒவ்வொருவன் உள்ளத் திலும் குடிகொண்டிருக்கும் தெய்வத் தன்மையுடைய ஆத்மா வுக்கு தீங்கு நேரிடாமல் பாதுகாப்பாய். சுகம் துக்கத்திற்கு மேலாக ஆத்மாவை நிறுத்தி வைப்பதே ஞானமாகும். தனக்கு மற்றொருவன் இது செய்யவேண்டும். இது செய்யாமல் இருக்க வேண்டும் என்று எதிர்பாராதிருப்பதே ஞானம். பயனில்லாச் செயல், மோசம், கபடம் இவைகளைச் செய்யாதிருத்தலே ஞானம். எந்தச் சிறிய காரியத்தையும் மனதில் நிலைகொண்ட தருமத்தின்படி செய்ய வேண்டும்.

விதியால் வந்த சுகமும் விலக்க முடியாத துக்கமும் உலகத்தை நடத்தும் தெய்வம் கொடுத்த வரமென வணக்கத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். உலக விசயங்கள் சில நமக்கு சுகம் தருவனபோல் ஏமாற்றி வலையில் இழுக்கும். சில கஷ்டம் தருவனபோல் பயமுறுத்தும். சில நம்முள் அகங்காரத்தை உண்டாக்கும். இவை எல்லாம் உண்மையில் அற்பமானவை, பயனற்றவை, நிலையற்றவை, தைரியமும் நீதியும் பொருந்திய மன்னனாக வாழ்வாய். எந்த நிமிஷம் வேண்டினும் உத்தரவு வந்தவுடன் செல்வதற்கு தயாராய் இரு. சாட்சியாவது ஆணைச் சொல்லாவது வேண்டாத சத்தியவானாய் இரு. கோபத்தினால் செய்யும் அக்கிரமங்களைவிட ஆசையினால் செய்யும் அக்கிரமங்களில் பாபம் அதிகம். ஆசையினால் செய்யும் குற்றத்தில் நோதல் இன்றி பாபம் செய்கிறான். ஆகையால் அதுவே பெரும் குற்றம். எல்லாப் பொருள்களும் உருவம் மாறி வருவதும் சிதைவு படுவதும் இயல்பாகும். இதுதான் உலகத்திற்கு உயிராகும். இந்தத் தத்துவத்தைக் கொண்டு உன் வாழ்க்கையை நடத்த வேண்டும். புத்தகப் படிப்பைத் தள்ளு அது உதவாது. மரணத் தறுவாயில் கற்றதும் கேட்டதும் திருப்தி அளியாது. அடைந்த சுகத்திற்கு உண்மையில் நன்றியுள்ளவனானால் துன்பங்களையும் இன்றியமையாத நிகழ்ச்சிகள் என உணர்ந்து சாந்தசிந்தையுடன் உயிர்விட வேண்டும். சகலமும் தெய்வாதீனமே. அதற்கு மாறாக ஓர் அணுவும் அசையாது. தெய்வத்தை நம்பி எஞ்சியுள்ள நாட்களை முடித்துக்கொள். நீ படைத்த அனைத்தையும் தெய்வத்திற்கு சமர்ப்பித்தாய் என்று சந்தோஷமாய் இரு. மற்றவர்களை நான் அக்கிரமமாக நடத்தவில்லை.

எவனுடைய சுதந்திரத்தையும் நான் ஆக்கிரமிக்கவில்லை. சுதந்திரமாய் காலம் கழித்தேன் என மகிழ்ச்சியாய் இரு. உனக்கு தீங்கு செய்யப்பட்டது உண்மை அந்தத் தீமை அதைச் செய்தவனைத்தான் பாதிக்கும். இந்த நிகழ்ச்சி முந்திய விதியில் அமைந்து உனக்கென்று ஏற்கனவே ஏற்பட்டதாயிற்றே அதற்காக கவலை வேண்டாம். ஞானத்தோடும் அறவழியில் நின்றும் செயல்படுவாய். எப்போதும் சாம்பலாவேன் என்பது தவிர வேறு என்ன கவலை வேண்டும் அதற்குத்தான் ஏன் கவலை. தெய்வமுண்டு ஒழுங்குண்டு அமைப்புண்டு என்றால் உலகத்தை நடத்தும் தெய்வத்திடம் விசுவாசமும் பக்தியும் வைத்து அமைதியடை. உன் கடமையை ஆற்றுவதில் வெயில்குளிரைப் பார்க்காதே. தூக்கத்தையும் பார்க்காதே. பிறர் போற்றுவதையும் தூற்றுவதையும் கவனிக்காதே. உயிர் போவதையும் பொருட்படுத்த வேண்டாம். உயிர் துறப்பதையும் சரியாகச் செய்து

முடிக்க வேண்டும், மரணம் வந்ததும் உலகத்தை ஆண்ட மன்னனும் அவன் குதிரைக்காரனும் ஒரே நிலமையை அடைந்தார்கள். பரம்பொருளில் சேர்ந்துவிட்டார்கள் அல்லது ஒரே விதமான அணுக்களாய்ச் சிதறிப் போனார்கள். தன் லாபத்தைக் கருதி ஒருவன் செய்வது பிழையாக இருக்கலாம். அப்படியாயின் பிழை செய்தவனுக்கு பிழையைக் காட்டி அறிவுறுத்துவாயாக. உன்னுடைய ஆத்மா மனித ஆத்மாவாக இருப்பது மாறி, அரச ஆத்மாவாகப் போய் விடாமல் கவனித்துக்கொள். பழக்கத்தினால் நீயும் கூடக் கெட்டுப் போகலாம். சாதாரண மனிதத் தன்மையை இழந்து விடாதே. சுயமரியாதை காத்து நெறி தவறாமல் யோக்கியமாய் நியாயத்துக்கும் தெய்வத்துக்கும் பயந்து நடந்துகொள். தரும நூல்களில் எதைக் கண்டாயோ அதன்படி நடக்கவேபார். உன்னிடம் இல்லாத ஒரு பொருளின்மேல் ஆசை கொள்ளாதே. உன்னிடம் இருக்கும் சிறந்த பொருள்களை எண்ணி மகிழ்ச்சி அடைவாய். அப்பொருளின் மீது வரம்புமீறி பற்று வைக்க வேண்டாம். அவைகளை இழக்க நேரிட்டால் அதிகம் துன்பப்படுவாய். அனந்த காலத்தையும் பிரகிருதிப் பொருளையும் நோக்கும் அறிவை உடையவனுக்கு மனித வாழ்நாள் பெரிதாகத் தோன்றாது.

எவன் பிறரிடம் நெறிதவறி நடக்கிறானோ, அவன் தனக்கே கேடு விளைவித்துக் கொள்ளுகிறான். தன் சுபாவத்தை அசுர சுபாவமாக்கி தனக்கே அநீதி செய்து கொள்ளுகிறான். சக்கரம் போல் எல்லாம் விடாமல் சுழன்று வருகின்றது. மேலே சென்றது கீழாகும், கீழே போனது மேலாகும். ஒவ்வொரு சம்பவமும் பராசக்தியின் எண்ணப்படியே நடக்கும். ஒருவன் தவறிப் பிழை செய்தானானால் அவனுக்கு அன்புடன் புத்தி புகட்டி திருத்துவாயாக. அப்படிச் செய்ய முடியாமல் போனால் தவறு உனதே என்று எண்ணுவாயாக.

ஒருவன் முயலைப் பிடித்தேனென்று பெருமைப்படுவான். மற்றொருவன் குருவியைப் பிடித்தேனென்று சந்தோசப்படுவான். வேறொருவன் காட்டுப் பன்றியைப் பிடித்தேனென்று பெருமையாக நினைப்பான். வேறொருவன் அயல்நாட்டு மக்களை அடிமை கொண்டதற்காகப் பெருமைப்படுவான். மெய்யறிவு அடைந்தவனுக்கு இவை அனைத்தும் ஒரே விதமான கொலையும் களவுமாகத்தான் தோன்றும். எந்தக் காரணங்களினால் நெறி தவறினார்களோ அக்காரணங்களைத்தான் நோகவேண்டும்; பக்தி என்றால் உனக்கு நேர்ந்ததை மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்ள வேண்டும். நீதி என்றால் உண்மையை மறைக்காமல் பேச வேண்டும். தருமம் தவறாமல் நடக்க வேண்டும். மற்றவனின்

தவறு, சொல், எண்ணத்தைக் கருத்தி உன்செயல் வேறுபடக் கூடாது. மரணம் நெருங்கியிருக்கிறது என்பதை அறிந்து ஆன்மாவின் நலனை பெரிதாகக் கருதி மற்றவர்களை எல்லாம் பொருட்படுத்தாமலிருக்க வேண்டும். மறைந்து நம்முடைய எண்ணங்களை தெய்வம் நேரில் காண்கிறது. நீயும் கவலையற்று அறிவுடன் வாழ விரும்பினால் உள்ளே நிற்கும் மெய்ப்பொருளைப் பார்க்க பழகிக் கொள்ளவேண்டும். ஆத்மாவை நோக்கும் ஒருவனுக்கு துணியும் மணியும், வீடும் மாளிகையும். புகழும் செல்வமும். அதிகாரமும் மற்ற நாடக வேஷங்களும் தாமாகவே மறைந்து போகும். பல விசயங்களைப் பற்றி கவலைப்படுவதில் என்ன பயன்? ஆத்மாவுக்கு அடியனாகி நீதியும் அடக்கமும் கொண்டு வாழ்வதே பெருமை. அடக்கம் உள்ளத்தில் இருக்கவேண்டும். உள்ளமாகிய தனி ஆசிரமத்தில் மௌனமாக இருந்து மனவலிமையை அடைய விரும்பினால் சாந்த சித்த எண்ணங்களைச் சேர்த்து வைத்திருக்க வேண்டும். அரச ஆத்மாவாக வாழ விரும்புபவனுக்கு இவைகள் சித்திதர முடியாது. வெளியில் அடக்கம் காட்டி உள்ளத்தில் அகம்பாவம் கொண்டு இருப்பது பெரிய அகம்பாவம். வாழ்வைக் காப்பது விவேகம். நியாயமாக நடந்து சத்தியம் பேசி வந்தால் கோர்வை வழுவாமல் வாழ்வு நடக்கும். நீ இவ்வுலகத்திலிருந்து ஐந்து வருஷம் முன்பு போனால் என்ன, பின்பு போனால் என்ன, எந்தச் சக்தி உன்னைப் படைத்ததோ அந்தச் சக்தி உன்னைப் போ என்கிறது. இதில் என்ன குற்றம். நீ இந்த உலகத்தில் ஐந்து வருடம் கூடுதலாய் வாழ்ந்து என்ன பயன் கண்டாய். என்ன சம்பாதித்துக் கொண்டாய். இறந்தவர்களைத் தூக்கி அடக்கம் செய்திருக்கிறாய். அதனால் இறந்தவர்களுக்கோ உனக்கோ என்ன லாபம்.

## தியானம் :

மனிதனுக்கு இருக்கவேண்டிய உயர்ந்த பண்பாடு நன்றி தான். மண்ணும் தீயும் நீரும் காற்றும் வானமும் ஆகிய பஞ்ச பூதங்களும் உன்னைப் படைத்துக் காத்து வருகின்றன. இந்தச் சமுதாயத்துக்கும் உலகத்துக்கும் நன்றியுள்ளவனாக கடமைகளை ஆற்றவேண்டும். பெரியபெரிய ஞானிகள் அரியபல விசயங்களை எழுதி வைத்திருக்கிறார்கள். அவற்றின் அடிப்படை நோக்கமெல்லாம் இந்தப் பூமியிலே நீ இனமாக வாழ்ந்துவிட்டுப் போகக் கூடாது என்பதுதான். இந்த நாட்டிலே பிறரது உதவியையும் ஆதரவையும் பெற்றுவாழும் மனிதனே! உனக்கு நல்லது செய்தவனுக்கே தீமை செய்ய நினைக்கிறாய். உனக்கும் மாட்டுக்கும் என்ன வித்தியாசம். பின்னர் எதற்காக மகான்

கள் எழுதி வைத்திருக்கிறார்கள். பெயர்களை மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா. நாம்தான் எல்லாவற்றையும் செய்துகொண்டிருக்கிறோமே. நமக்குப் பிறந்து வளர்ந்து படிக்கத் தெரியும். உத்தியோகத்துக்குப் போகத் தெரியும். சம்பாதிக்கத் தெரியும். வீடு நிலம் வாங்கத் தெரியும். கல்யாணம் செய்து பிள்ளைகள் பெற்றுக்கொள்ளத் தெரியும். ஆனால் மனிதனாக வாழத் தெரியாது. இந்தக் கலையைக் கற்றுத் தருவதற்குத்தான் அவ்வப்போது மகான்கள் தோன்றுகிறார்கள். நாட்டுக்கு ஏன் கஷ்டம் வருகிறது. மக்கள் துன்பப்படுகிறார்கள். வறுமையில் வாடுகிறார்கள், குழப்பத்தில் மூழ்குகிறார்கள். இவை எல்லாம் ஆகாயத்திலே இருந்தா குதித்தன. மனித குணங்களே இல்லாதவர்களினாலேதான் இத்தகைய குழப்பங்களும் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. இவற்றைச் செப்பனிட வேண்டும் என்பதற்காகத்தான் நிறைய நூல்கள் எழுதிவைத்துப் போயிருக்கிறார்கள். இந்த உலகத்திலே எல்லாம் சட்டப்படிதான் நடக்கின்றன. செயற்கைச் சட்டம் என சிலவற்றை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொண்டோம். இயற்கைச் சட்டம் சூரியன் சந்திரன் வருவது, மழை புயல் வெள்ளம் இவைகள் வருவது.

(எட்டு மணிக்கு ஆபீஸ் போவது. 11 மணிக்கு டீ சாப்பிடுவது, ஒரு மணிக்கு வயிறுமுட்டச் சாப்பிட்டுவிட்டு இரண்டு மணியிலிருந்து கொஞ்சம் தூங்குவது, இடையில் கொஞ்சம் ஆபீஸ் வேலையைப் பார்ப்பது. ஐந்து மணியடித்தால் வீட்டுக்குக் கிளம்புவது. முதல் தேதி தவறாமல் சம்பளம் மட்டும் வாங்குவது, இது செயற்கைச் சட்டம்)

இவை இரண்டுக்கும் சட்டம் இருக்கும்போது ஒன்றுக்கு மட்டும் சட்டம் செய்யவில்லை. இந்த உலகத்திலே யார் யார் பிறக்கலாம். எவன் எவன் பிறக்கக்கூடாது. என்று சட்டம் செய்யவில்லை. அதனால் கண்டவன் எல்லாம் பிறந்துவிட்டு ஊரைப் பாழாக்குகிறான். மகாசக்கரவர்த்தி அலெக்சாண்டர் கூறுகிறார் :-

நான் இந்த உலகத்தில் எத்தனையோ போர்களை நடத்தினேன். எத்தனையோ வெற்றிகளைக் கண்டேன். புகழையும் கீர்த்தியையும் பொன்னையும் பொருளையும் சம்பாதித்தேன். கடைசியில் நான் ஒன்றுமே கொண்டுபோகவில்லை என்று உலகத்தாருக்குத் தெரிய வேண்டும். ஆதலால் நான் இறந்தபின் எனது கைகள் இரண்டையும் மூடாமல் வெளியில் தெரியும்படி வைத்துத் தூக்கிச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நமது ஈகையும் தர்மமும் நல்ல சிந்தனையும்தான் நிலைத்து நிற்கும். ஆதலால் வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டும் என்கிறார் வள்ளுவர். அதனாலே இந்த உலகத்திலே பிறந்து வளர்ந்து மறைவதற்குள் நல்ல காரியங்களைச் செய்துவிட்டுப் போகவேண்டும். அந்த நல்ல எண்ணங்கள் தோன்றவேண்டுமே என்பதற்காகத்தான் முன்னோர்கள் நூல்களில் எழுதி வைத்தார்கள். அவற்றைக் கொஞ்சமாவது படிக்கவேண்டும். அறிவு தான் தெய்வமே என்றார் தாயுமானவர். மனத்தினுடைய வேலை நினைப்பது. புத்தி உருவம் கற்பிக்கும். சித்தம் பற்றிக்கொள்ளும். அகங்காரம் செயல்படுத்தும். ஒரு மாம்பழம் தின்றால் நன்றாக இருக்கும் என்று மனம் சொல்லிவிடும். புத்தி அந்த நினைப்புக்கு உருவம் கற்பிக்கும். அதாவது சிவப்பாக உருண்டையாக பக்கத்து வீட்டுத் தோட்டத்தில் ஒரு மாம்பழம் தொங்குகிறது என்று தன் வேலையை முடித்துவிடும். அப்படியானால் மாலை 6 மணிக்கு அந்தப் பழத்தைப் பறித்துச் சாப்பிடுவோம் என்று சித்தம் உறுதிப்படுத்தும். அகங்காரம் செல்படுத்தும். அதாவது 6 மணிக்கு சுவர் ஏறிக்குதித்து மாம்பழத்தைப் பறித்து பக்கத்து வீட்டுக்காரன் கொடுப்பதையும் வாங்கிக் கொள்ளுமாறு செய்யும். இந்த நான்கோடு சம்பந்தப்படாமல் அறிவு பார்த்துக் கொண்டிருக்கும். ஆணவம் கொண்டவர்களுக்கு அறிவு பயன்படாது. எல்லாவற்றிற்கும் மூலகாரணமான மனத்தினை அறிவின் துணைகொண்டு பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும்.

மகான்கள் அருளிய அருள்மொழிகள் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்களால் சொல்லிக்கொண்டே மறையாமல் இருக்கின்றன. எண்ணங்களே மனிதனை உருவாக்குகின்றன. "மனம் போல வாழ்வு" என்ற நாட்டுப் பழமொழி இதனைத் தெளிவாக்கும். எண்ண அலைகள் ஒளிவேகத்திலும் மிக்க வேகமுடையது. ஈதரைவிட மென்மையானது என அறிஞர் கூறுகின்றனர். நினைக்கின்ற மனத்தை உடையவனே மனிதன். மனிதன் என்றால் எண்ணத் தெரிந்திருக்க வேணடும். அந்த எணணங்கள் எப்படி அமைந்திருக்கின்றனவோ அப்படியே அவன் வாழ்வு அமைகிறது. வெளிப்பகட்டு உதவாது. எணணங்கள் உள் ஒடுங்கி நின்று செயல்பட்டால் பல நன்மைகள் விளைகின்றன என்பதனை நாம் நன்கு உணர்வோம். நல்ல செயல்கள் எல்லாமும் மனத்தின் உள் ஒடுக்க நிலையால் ஏற்பட்டனவே ஆகும். புறவாழ்வில் வெற்றி பெற்றவர்களையும் அகவாழ்வில் வெற்றி பெற்றவர்களையும் வைத்து இக் கருத்தில் தெளிவு பெறலாம். இவ்வாறு மனம் உடைய மனிதன் மனதை ஆளத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற காரணத்தால் "ஆள்" என அழைக்கப் பெறுகிறான்.

ஆள் என்ற சொல் '' ஆட்சி செய் '' என்ற பொருளுடையது. நாமெல்லாம் மனம், புத்தி, சித்தம் 'ஆகியவற்றில் பிறரை அடக்கி ஆளுவதே இதன் உட்பொருள் என எண்ணி நமக்கும் பிறர்க்கும் இன்னலை விளைவித்து வருகிறோம். ஆளத் தெரியாமல் அடக்கிவைத்து வஞ்சனையாகவும் பொய்யாகவும் வாழ்ந்து வருகிறோம். மனதை எவன் ஒருவனால் நன்கு ஆள முடிகிறதோ அவன் பூரண ஞானம் பொலிந்தவனாக விளங்குவான். அவனால் உலகில் உள்ளோர் நலம் பெறுவர். மன ஒழுங்கு ஏற்பட்டால் உலகில் அல்லலும் இல்லை, இன்னலும் இல்லை, பகையும் இல்லை, பகைவரும் இல்லை என்பன விளங்கும். வேண்டப்படுவது உள்ஒடுங்கி நின்று உண்மை உணரும் முயற்சியேயாகும். அக்கிரமம் என ஒரு விசயத்தை மனம் ஏற்றுக்கொண்டால் அவருக்கும் உணர்ச்சி உண்டாகும். செம்மைப்படுத்தா எண்ணங்கள் உணர்ச்சிவசப்பட்டு உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம், வெகுளி என்ற அசுர பண்புகளாக வளர்ந்து துன்பத்தை விளைவிக்கின்றன. இதனை நாம் அன்றாட வாழ்வில் நம்மையும் பிறரையும் வைத்து எண்ணிப் பார்த்தால் விளங்கும். செம்மைப்பட்ட எண்ணம் உடையார் செயற்கரிய செயல்களைச் செய்வார்கள். அச்செயல்களை வைத்து அவரவர் எண்ணங்கள் எந்த அளவிற்கு செம்மைப்பட்டமை என அறிதல் கூடும். எண்ண ஆற்றலால் பிறர் மனதில் உறையும் எண்ணங்களை உணர்ந்து வெளிப்படுத்தும் ஆற்றல் உடையாரையும் காணுகின்றோம். ஸ்வான் என்ற அறிஞர் தொலைவிலுள்ள நண்பரை அழைத்து 100 கோடி கிலோ மீற்றர் தொலைவிலுள்ள வியாழன் கோளுக்கு பயணம் செய்யலாமென மனதினாலே பயணம் செய்து வியாழன் பற்றி பல செய்திகளை கூறினாராம். அவை அனைத்தும் உண்மை என்பது பின்னர் சென்ற பயனியர்-10 என்ற விண்வெளிக்கலம் அனுப்பிய செய்திகளோடு ஒப்பிட்டுப் பார்த்ததில் தெரியவந்துள்ளது. இதுதான் மனத்தின் உண்மை. இதனால் ஒருமுகப்பட்ட ஆழமான அழுத்தம்மிக்க எண்ணத்தினால்தான் பிரபஞ்சம் முழுவதிலும் நிகழும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பதை நன்கு அறியலாம். ஆசையின்றி இல்லறத்தான் இவ்வுலகத்தில் வாழ இயலாது. ஆனால் அந்த ஆசை நமது ஆட்சிக்கு உட்பட்டு இருக்க

வேண்டுமே தவிர அது நம்மை ஆளுமாறு விட்டுவிடக் கூடாது. நம் உள்ளத்து எழும் எல்லா ஆசைகளையும் அவை எழும்போதே நமது காலம், இடம், பொருள் நிலை ஆகிய வற்றிற்கு ஏற்ற ஆசைதானு? அது இன்றி மகிழ்வாக வாழ முடியாதா என்பன போன்ற வினுக்களால் ஒழுங்குபடுத்தி அவற்றை நிறைவேற்ற அறிந்துகொள்ள வேண்டும். எண்ணங்கள் ஒருமுகப்படுவது செம்மையாவது ஆகியவற்றிற்கு முதலில் தன்முயற்சி வேண்டும். தன்முயற்சி இல்லையெனினும் சமுதாய நலனின் நாட்டமுடைய நல்லவர்கள் நல்ல சூழ்நிலையை அமைத்துத் தரவாவது வேண்டும். கொடுமையானவனைக்கூட நல்லவனுக்குவது நல்ல சூழ்நிலை என்பதனை வான்மீகியின் வரலாற்றினைக் கொண்டு அறியலாம். மனத்தினைச் சுத்தமாக வைத்துக்கொண்டு இறைவழி நிற்கின்ற தியானம் செய்தல் வேண்டும். மனத்திலே தோன்றுகின்ற குற்றங்கள் என்று சொல்லப்படுபவைகளுக்கு அடிப்படையாக இருப்பவை அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் ஆகிய குணங்கள் நான்கு இந்த அசுர குணங்களை துணையாகக் கொண்டு ஏனைய பல அசுர குணங்கள் உண்டாகின்றன 2000-3000 ஆண்டுகட்கு முன்னதாகவே அறிவு உடையவர்களும் இருந்தார்கள். அறிவு இல்லாதவர்களும் இருந்தார்கள். இன்றும் தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கிறுர்கள். பிறருக்கு உதவிசெய்து வாழ்வதுதான் மனிதனின் கடமை என்று அறிந்து அதன்படி வாழவேண்டும். மோசமாகவும் பழிபாவங்களுக்கு ஆளாகியும் வாழ்ந்த ஒருவன் இறந்த பிறகு அவன் உடலைப் புதைத்த இடத்தில் ஏற்கனவே நல்ல விளைச்சல் இருந்தாலும் இவனைப் புதைத்த பின்பு விளைச்சலே இல்லாமல் போகும் என்கிறுர் வள்ளுவர்.

'' வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம். ''

மகான்கள் ஞானிகள் தவம் செய்து சமாதியாக நிறுவப் பெற்ற இடங்களில் தான் பெரிய பெரிய கோயில்கள் கோபுரங்கள் அமைந்து அந்தத் தலங்கட்கு ஆயிரக்கணக்கான மக்கள் சென்று வருகின்றனர்.

அசுர குணங்களோடு வாழ்ந்த ஒருவன் உடலைப் புதைத்த இடத்தில்தான் கள்ளுக் கடைகள் சாராயக் கடைகள் அமையப் பெறுகின்றன என்று கூறுவது மிகையாகாது.

மனம் என்னும் பேய்க் குரங்கை அடக்குவதற்கு மகான்கள் சொல்லியுள்ள மறைமொழிகளை அடிக்கடி உச்சரித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

நாம் பழகுகின்ற எல்லோரையுமே நண்பர்கள் என்ற கணக்கில் வைத்துக் கொள்ளக்கூடாது.

ஒருவருடன் பல்லாண்டுகள் பழகிய பின்னரே அவரை நண்பர் என்ற சிறப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டும். நேற்று மாலையில்தான் ஒருவரைச் சந்தித்தேன் அருமையான நண்பராகிவிட்டார். இன்று காலையில் சந்தித்தேன் என்மீது உயிரை விடுகிறார் அவ்வளவு நெருக்கமாகிவிட்டார் என்று ஒருவர் சொன்னால் அது நட்புக்கு இலக்கணமாகி விடாது. ஒருநாள்கூட முழுமையாகப் பழகாதவர் இவர் மீது உயிரை விடுகிறார் என்றால் மறு நாளைக்குள் இவர் உயிரை அவர் எடுத்துவிடுவார் என்பது அர்த்தமாகும்.

நல்ல நண்பர் ஒருவரோடொருவர் எத்தனையோ விதமான செய்திகளை எல்லாம் பேசுவதைப் பார்க்கிறோம். அவர்கள் நட்பும் தேவ அம்ச நட்பாயிருந்தாலே பயனுண்டு. மனத்தில் உள்ளதை அப்படியே திறந்து பேசுகின்ற இடமே தேவாலயம் என்று சொல்லுவார்கள். எப்படிப்பட்ட வழிபாடும் நற்பயனைத் தந்தே தீரும். பயனில்லாமல் போகாது. மனத்தினை மாசு இல்லாமல் வைத்துக் கொண்டு வழிபாடு செய்தல் வேண்டும்.

( காட்டிலே வாழ்வது கடினம் என்று பெரியவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.) காட்டிலே கொடுமையான மிருகங்கள் இருந்தாலும் அவைகளை அடையாளங்கான வித்தியாசமான முகங்களை ஆண்டவன் கொடுத்து விட்டார். ஆதலால் அடையாளம் கண்டு தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் நாட்டிலே மக்களிடையே வாழ்வது மிகமிகக் கடினம். ஏனெனில் மக்களாய்ப் பிறந்த அனைவ

ருக்கும் முகத்தோற்றம் ஒரே மாதிரி படைக்கப்பட்டுவிட்ட படியால் இவர்களிலே எது நரி, எது கரடி, எது புலி என்று கண்டுகொள்ள முடியாமல் நாமே சில நேரங்களில் கரடித் தோளில் கையைப் போட்டுக்கொண்டு வீட்டிற்கு அழைத்துச் செல்கிறோம். அந்த மனிதக் கரடி ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிவிட்டுப் போகிறது. ஆதலால் மனிதன் என்று அளந்து பார்க்கிற கருவி குணம் தான் என்பது விளக்கமாகும். பிறருக்குப் பயன்பட்டு இயன்றவரை உதவி செய்து கருணை என்கிற குணங்களே இல்லாமல் இருப்பவனுக்கு பெரிய அறிவு இருந்துதான் என்ன பயன்?

நிறைந்த கல்விமான்களும் அறிவாளிகளும் ஆற்றல் மிக்கவர்களும் இல்லாத காரணத்தினால்தான் ஒரு சமுதாயம் முன்னேற முடியாமல் போகிறது என்று கூறுவதைவிட பண்பாடும் ஒழுக்கமும் மனிதத் தன்மையும் இல்லாதவர்கள் நிறைந்திருப்பதால்தான் ஒரு நாடு முன்னேற்றமடையாமல் இருக்கிறது என்று கூறுவதுதான் உண்மை. (மார்க்கோஸ்)

சிலபேர் கல்விமான்களாக இருப்பார்கள் ஆனால் மனிதப் பண்பாடு இல்லாதவர்களாக இருப்பார்கள். இவர்களைவிடக் கொஞ்சமாகப் படித்து கொஞ்சமாக அறிவுபெற்று மனிதப்பண்பு நிறைந்தவர்களால்தான் ஒரு சமுதாயம் நல்லபடியாக வளர முடியும்.

**முயற்சி :**

குறுக்கு வழியில் லாபமடையவே நம் சிந்தனை செல்கிறது. சுயமாகச் செயல்புரியும் ஆற்றலைக் கட்டவிழ்த்து விடுவதில் நாம் வெற்றி பெருததே இதற்குக் காரணம்.

விருப்பு வெறுப்பின்றி உண்மை நாடும் பேரவாவுடன் நாம் இவற்றிற்கு விடை காணவேண்டும்.

நல் வாழ்வுக்கு நாம் பொறுப்பு, நம் சூழ்நிலைக்கு நாம் பொறுப்பு, நம் முன்னேற்றத்திற்கு நாம் பொறுப்பு என்ற உணர்வு நம்மிடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆள்பவர்கள் மீது பழியைச் சுமத்துகிறோம்.

சிறு வயதிலிருந்து பெற்ருேரிடமும் ஆசிரியரிடமும் வளர்ந்தபின் மேலதிகாரியிடமும் நாம் அவர்கள் முகம் பார்த்து அவர்களது ஆதரவையும் அனுமதியையும் எதிர்நோக்கி நடந்து கொள்ளுகிருேம்.

நிலம், நீர் உடமையிலிருந்து பொலிஸ் பாதுகாப்பு, அலுவலகம்வரை அரசாங்கக் கெடுபிடிகளை அனுசரித்து ஆதரவு தேடி வாழ்க்கை நடத்துகிருேம். சட்ட திட்டங்களினுலும் பழக்க வழக்கங்களினுலும் நாம் நம் வாழ்க்கைக்கு பிறரது தயவை எதிர்பார்க்கும் நிலை நமது ஊரில் அதிகம் நிலவுகிறது. இல்லாதவனிலிருந்து இருப்பவன் வரை பொருட்களை இனுமாகப் பெற்றுக் கொள்வதை நியாயம் என்று கருதுகின்ருேம். இனுமாகப் பெறுவது யாசகம், இழிவு என்ற மனுேபாவம் நம்மிடையே இல்லை. தன் காலிலே நிற்க முடியாத சார்ந்து நிற்கும் ஒரு சமுதாயம், நமது பரம்பரையாய்ப் போய்விட்டது. பிறரிடமிருந்து ஒரு பொருளைப் பெறுவது முறையல்ல. நம் தன்மானத்தில் தலையிடிக்கும் செயல் என்று மேல் நாடுகளில் கருதுகிருர்கள். நம் நாட்டில் இது நியாயமாகப்படுகிறது. ஜப்பானில் ஒரு கடையில் இரு நெருக்கமான உறவினர்கள் பானம் அருந்திஞல் அவரவர் செலவை அவரவரே செலுத்துவார்கள். எக்காரணம் கொண்டும் ஒருவர் செலவை மற்றவர் ஏற்கவும் மாட்டார். இதுதான் தன்மானம். எல்லோரும் சமநிலை. எல்லோரும் வாழவேண்டுமென்ற மனுேபாவம். எமது நாடு எமக்காக கடும் உழைப்பு உழைக்கிருேம் என்ற சிந்தனை. களவு கிடையாது.

தமிழின நிலைமை இன்று அடைந்த நிலைமைக்கு முகம் பார்த்து வாழ்ந்த நிலையே காரணம்.

மனதிற்கும் செயலுக்கும் பெரிய தொடர்பிருக்கிறது. உண்மை, நேர்மை சமத்துவம் உதவும் உள்ளம் என்ற நிரந்தர உண்மைகளால்தான் இவ்வுலகம் இயங்குகிறது. இதற்கு மாருக நம் மனுேபாவம் அமையும்போது நம்மால் செயல்பட முடிவதில்லை. காரியங்கள் பூர்த்தி பெறுவதில்லை. பிச்சை மனுேபாவம் இந்நிரந்தர உண்மைகளுக்கு மாறுபட்ட செயல்.

ஒரு சமுதாயம் முன்னுக்கு வருவது அதிலுள்ள தனிமனிதர்களின் ஆர்வத்திஞலும் முயற்சியினுலும் செயல்களினுலும் தான். அரசாங்கத்திஞல் ஒரு சமுதாயம் வளம் கொழிக்கும்

நாடாக மாறியது என்று நடந்ததில்லை. அது செலவழிக்கும் பணம் பொது மக்களிடமிருந்து வரியாகத் திரட்டப்படும் பணம். நம் நாட்டிலோ எல்லாவற்றிற்கும் அரசாங்கம் செலவு செய்ய வேண்டும் என்ற அபிப்பிராயமும் எங்கோ வானத்திலிருந்து அரசாங்கச் செலவுக்குப் பணம் வருகிறது என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கிறாற்போல் விசயங்கள் நடைபெறுகின்றன. அரசாங்கம் என்பது ஒரு தேவையான இடைஞ்சல் அதை எவ்வளவுக்கு எவ்வளவு குறைத்து வைத்துக் கொள்ளுகிறோமோ அந்த அளவுக்கு ஒரு நாட்டில் தனிமனித சுதந்திரமும் தனி முயற்சியும் அதிகமாகும்.

அரசாங்கம் ஒரு ஆபீஸ் குமாஸ்தாவை உருவாக்கி இருக்கிறதே ஒழிய ஒரு புதியன கண்டு பிடிக்கும் விஞ்ஞானியை புதுப் பணத்தைக் கொண்டுவரும் தொழிலதிபரை ஒரு கலைஞனை உண்டாக்கியதில்லை. அரசாங்கம் ஒரு செக்குமாடு. விஞ்ஞான மனோபாவம், தொழிலார்வம் கலை ஈடுபாடு எல்லாம் தனி மனிதனது ஆக்க சக்தியின் வெளிப்பாடுகள்.

அந்த ஆக்க சக்தியின் மூலம் அவன் தன்னையும் உலகையும் தான் காணும் அதி உன்னத நிலைக்கு அழைத்துச் செல்கிறான். தனிமனித ஆர்வம் தனிமனித துடிப்பு முயற்சி தொழில் கற்பனை தனி மனிதன் மேற்கொள்ளும் தியாகம் உழைப்பு இவற்றிலிருந்துதான் ஒவ்வொரு துறையிலும் சாதனைகள் மலர்ந்திருக்கின்றன. எந்த ஒரு நிறுவனமும் சீரும் சிறப்பும் பெறுவது அங்குள்ள மக்களின் தரமும் அவர்கள் காட்டும் தலைமை, தைரியம், கற்பனை, விடாமுயற்சி இவைகளைப் பொறுத்தது. ஒரு நிறுவனத்தில் உள்ள மனிதர்கள்தான் தோல்வியை வெற்றியாக மாற்றுகிறார்கள். புதிய பொருட்களையும் புதிய துறைகளையும் உருவாக்குகிறார்கள். ஆகவேதான் எந்தத்துறையானாலும் சரி ஒரு நல்லெண்ணம் படைத்த தலைவனும் திறமை மிகுந்த நிர்வாகப்படையும் தொழில் நிர்வாகத்தில் ஈடுபடுமானால் நம்நாட்டை யப்பானைப்போல் சிங்கப்பூரைப்போல் மாற்றிவிட முடியும். தனி மனிதர்கள் முன்னேறும் போதுதான் சமுதாயம் முன்னேறுகிறது. ஆகவே நாம் தனி மனிதர்களை சுதந்திரமாகச் செயல்பட ஊக்குவிக்க வேண்டும். நம்மால் முடியும் நான் முயல்வேன் என்ற துடிப்பு நமக்கு வேண்டும். அதுதான் தொழில் வளத்திற்கு முதல்படி.

ஒரு தனி மனிதன் நேற்றுவரை வெகு சாதாரணமாக இருந்த ஒரு மனிதன் இன்று எப்படி செல்வந்தனாக வசதிகள் படைத்தவனாக தொழிலதிபனாக மாறினான். எப்படி மாற முடிந்தது. அப்படியானால் எது ஒரு மனிதனை மற்றவர்களைவிட உயர்த்திக் காட்டுகிறது. வெறும் உழைப்பு மட்டுமல்ல, தொழில் நுட்ப அறிவு மட்டுமல்ல.

நாளைய தொழிலதிபனாகும் இன்றைய மனிதனிடம் தன் காலிலே நிற்கும் தணியாத ஆர்வம் இருக்கிறது. தன் வாழ்க்கையை விதி கட்டுப்படுத்தவில்லை. அத்தை, பாட்டி, அம்மா, அப்பா என்று தன் குடும்பத்தினர் கட்டுப்படுத்தவில்லை. கட்டுப்படுத்த முடியாது என்ற நம்பிக்கை அவனிடம் இருக்கிறது.

நான் முன்னேறுவேன் தொழிலதிபனாவேன். ஊருக்கும் உலகத்திற்கும் ஒரு பயனுள்ள பொருளை அல்லது திறமையை அளிப்பேன் என்ற தணியாத ஆர்வம் அவனிடம் இருக்கிறது. அமெரிக்கத் தொழிலும் வியாபாரமும் முழுக்க யூதர்களின் கைகளில் இருக்கிறது. அவர்கள் கையில் பணமிருக்கிறது. சிறுபான்மையினராய் இருந்தாலும் எந்த விசயத்திலும் அமெரிக்க அரசாங்கத்தை அடிபணிய வைக்கிறார்கள்.

நாம் என்ன செய்கிறோம். அரசியல் சதைத்துக் கொண்டிருக்கிறோம் அவலங்களை மறக்க சினிமா, நாடகம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அயல் வீட்டைப்பற்றி அலசுகிறோம். அரசியல், சினிமா, வீடியோ இவை தவிர எது பேசப்படுகிறது. சிந்திக்கப்படுகிறது. வீரமும் தன்மானமும் மக்கி மடிந்து போய்விட்டனவா? தலைவர்களே கொஞ்சம் யோசியுங்கள். அக்கறை கொண்டவர்களே இப்படியே போனால் எப்படி.

நாடு போகிற திசை தெரிந்தும் நாம் என்ன செய்கிறோம். எங்கே வந்தது அக்கறை. தன் காலிலேயே நிற்க தமிழ் சமுதாயம் தயங்குகிறது என்பது உண்மையானால் அதை மாற்ற நாம் என்ன செய்தோம் என்ன செய்யப் போகிறோம். நாடு போகும் திசையை கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்.

வேலை வேலை என்று தேடி அலைபவர்கள் என்னுடைய வேலையை நான் உற்பத்தி செய்வேன் நான் ஒரு தொழில் செய்வேன் என்று ஏன் எண்ணுவதில்லை. படித்தவுடன் வேலை தேடு என்று எல்லோரும் நினைக்கிறார்களே ஒழிய ஒரு வியாபாரத்தைச்

செய்வோம் ஒரு தொழிலைச் செய்வோம் என்று ஏன் எண்ணு வதில்லை. அப்படி நினைக்கும் பழக்கம் நம்சமுதாயத்தில் இருக்கு மானால் பார்க்கிற ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொரு மனித னிடமும் எப்படி உதவக் கூடும் என்று சதா சிந்திப்பான். தொழில் செய்யத் துவங்குபவர்களின் சில பிரச்சினைகள் என்ன வென்றால் திடீரென்று குபேரனாகிவிட வேண்டும் என்று பலர் எண்ணுகிறார்கள். எதுவுமே திடீரென்று நிகழ்ந்துவிடுவதில்லை. திறமையை உபயோகிக்கும் அரியவாய்ப்பாக தொழிலைக் கரு துங்கள் என்று கூறுகிறார்கள் அனுபவஸ்தர்கள். தர்மத்தையும் திறமையையும் தரத்தையும் முன்வைத்து உழைக்கும்போது பணம் தானே வரும். தேவைக்குமேல் வரும்.

இரண்டாவதாக சாமர்த்தியத்தின் மூலம் பணக்காரனாக முடி யும் என்று சிலர் நினைக்கிறார்கள். ஒன்றுமில்லாதிருந்த சிலர் சில ஆண்டுகளில் செல்வராக இருப்பதைப் பார்ப்பவர்கள் ஏதோ அவர்கள் சுலபமாகப் பேத்து மாத்து செய்து பணக் காரர்களானதாக தவறாக எண்ணுகிறார்கள். ஒருவன் ஏன் தொழில் செய்ய ஆசைப்படுகிறான் ஒரு மனிதனது திறமைகளை வெளிக்கொணரும் வாய்ப்பு தொழிலில் இருக்கிறது. பலர் தங் கள் திறமைகளை உணர்ந்தும் அதற்கு ஒரு வடிகாலும் வாய்ப் பும் அளிக்காமல் இருந்த இடத்திலேயே இருந்து ஒரு செக்கு மாட்டின் வாழ்க்கையாக தங்கள் வாழ்வை முடித்துக்கொள்ளு கின்றனர்.

வாழ்க்கை என்ற சாடிக்குள் ஆக்க சக்தி என்ற தேவதை ஒவ்வொருவருள்ளும் இருக்கிறது. சாடியின் மூடியைத் திறந்து விடுங்கள் நம்வாழ்வும் நாடும் மலரட்டும். சொந்தத் தொழில் புரிந்து முன்னுக்கு வருபவனும் நான் விரும்பும் தொழில், கலை இது. இதில் புகுந்து பிரகாசிப்பேன் என்று உழைப்பவர் களும் தங்கள் விதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளுகி றார்கள். உழைக்கிறார்கள், பலன் பெறுகிறார்கள். முன்வினைப் பலன்கள் பொய்யா என்று சிலர் கேட்கக்கூடும். முன்வினைப் பயன் என்பன காரண காரியம்போல் நம்வாழ்வைத் தொடர் வனதான். ஆனால் அத்தகைய எண்ணங்களினால் நாம் இந்த வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது. கடவுள் நமக்கு அளித்திருக்கிறார் என்ற உணர்வோடு நாம் செயல்பட வேண் டும். சந்திர மண்டலத்திற்கு மனிதனை அனுப்பியது திட்டமிட்ட செயல். நம்மனத்தில் தோன்றும் எண்ணங்கள் நாளடைவில்

திடமான நம்பிக்கையாய் மாறுகிறது. திடமான நம்பிக்கை நம்மிடம் செயலைத் தூண்டுகிறது. திரும்பத் திரும்பச் செய்யப் படும் செயல் நமது பழக்கமாய் மாறுகிறது. நமது பழக்க வழக்கங்களே குண நலன்களாகத் திகழ்கின்றன. நமது குண நலன்களே நமது வெற்றியை நிர்ணயிக்கின்றன.

மேல் நாடுகளிலோ பொருளாதார பாடம் ஆரம்பப் பள்ளி களில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அங்கே பொருளாதாரச் சிந்தனைகள் வளர்க்கப்படுகின்றன. நாம் இங்கே என்ன செய் கிறோம் எதை நம் இளைஞர்களுக்கு முன் வைக்கிறோம். கொஞ் சம் எண்ணிப் பாருங்கள். சினிமாவை, அரசியலை வீடியோவை. நமக்கு முன்னே வாழ்ந்தவர்கள் எப்படித் தங்கள் மனதை உப யோகித்தார்கள் என அறிய வேண்டும். வாழ்க்கையில் முன்னே றியவர்களது வாழ்க்கைச் சரித்திரத்தைப் படிக்கவேண்டும். அப்படி யாராவது அருகிலிருந்தால் அவர்களுக்கு நேரம் கிடைக் குமானால் அவர்களுடன் பேச வேண்டும். அவர்களின் அனுபவங் களைக் கேட்க வேண்டும். அவர்கள் ஆழ் மனக் கணிப்பை வளர்த்துக் கொண்டார்கள். தவறைப் புரிந்து கொண்டு உட னடியாகத் தங்களைத் திருத்திக் கொண்டார்கள். நான் தவறு செய்தேன் என்று ஏற்றுக்கொள்ள பெருந்தன்மை வேண்டும். நம் கர்வம் குறுக்கே நிற்கக்கூடாது. உலகம் ஒரு நியதியால் தான் இயங்குகிறது. நமக்குப் புரியாத சில நியதிகள் இருக்கின் றன. அதை அனுசரித்து நாம் ஜாக்கிரதையாக இருப்பது நல் லது. இது முடியும் என்ற மனோ நிலை, சந்தோஷமாக வாழ் வேன் என்ற தீர்மானம், முடிந்தவரை உதவுவேன் என்ற மனப் போக்கு, பெருந்தகையாளனாய் நடப்பேன் என்ற எண்ணம் இவைதான் சாதனை புரியும் மனத்தின் அடித்தளம். நமது உடல் பலத்த வேலைக்குப்பின் தளர்ந்து போவதைப்போல் மன மும் தளர்ந்து சத்துக் குறைவால் அதைரியத்தை ஊட்டலாம். அந்த நேரம் மட்டும் ஓய்வு தேவைதான். செலவு செய்வது தவ றில்லை. முதலில் வருமானத்தை தரும முறையில் நாம் அதிக மாக்கிக் கொள்ள வேண்டும். செலவு செய்யமுன் நாட்டின் தொழில்களை அதிகரித்து நாட்டின் வளத்தை முதலில் பெருக்க வேண்டும். இன்று பொருளாதாரம் நமக்கு முக்கிய இலக்கான காதலாய் இருக்க வேண்டும்.

★ ★ ★

சிவமயம்

# கீதை அமுத ரசம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை
பொன்னம் பலவன் ஞானகுரு வாணிபதம் நாடு'

பாண்டவர்கள் தம் உரிமையைத் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். கௌரவர்கள் மறுத்துவிடுகிறார்கள், கண்ண பிரானைத் தூது அனுப்புகிறார்கள். எமக்கு வரவேண்டியதைக் கேட்டு, மறுத்தால் 5 வீடுகளாவது கேள் அதையும் மறுத்தால் போர் முரசு கொட்டி வருவாயாக.

கண்ணன் துரியோதனனிடம் தர்மத்தைச் சொல்லி பலவழிகளாலும் கேட்கிறார். ஒன்றும் தரமுடியாது என்று கையை விரிக்கிறான் துரியோதனன்.

போர் முரசின் பேரொலி கேட்கிறது. அர்ச்சுனன் தனக்கு எதிர்ப்பக்கத்திலுள்ள பகைவர்களைப் பார்க்கிறான். அவர்கள் அனைவரும் உறவினர்கள். அம்பையும் வில்லையும் அரங்கத்திலே எறிகிறான் அர்ச்சுனன். இவர்களைக் கொன்று குவிப்பதா? என மனம் கலங்குகின்றான்.

போர் புரிவதா? விடுவதா? எது கடமை என்று தடுமாறுகின்றான் அர்ச்சுனன். அறிவு பண்படாததால் அவனது அறிவை மனம் பின்னுக்கு இழுத்துவிட்டது.

அறிவு பண்படாத போது சுவதர்மம் தெரிவதில்லை. மனம் தூய்மையாக அறிவு தூய்மையாகும்.

சுவதர்மமாவது தன்கர்மம் இருந்தபடியை அறிதல், ஒவ்வொருவரும் தமது வர்ண நிலைக்குரிய ஒழுக்கமாகிய தொழிலை அறிந்து கடைப்பிடித்தல் வேண்டும்.

கூலிவேலை செய்பவன் கீதா தத்துவத்தை அறிந்திருந்தால் தன் வேலையைத் திறம்பட செய்ய முடியும். கமத் தொழில் செய்பவன் சரி, வியாபாரியாயினும் சரி, ஆசிரியனாயினும் சரி கீதா தத்துவத்தை நன்றாக அறிந்திருக்க வேண்டும்.

மனுநீதிச் சோழன் மகன் வீதியிலே தேரில் சென்ற பொழுது ஒரு பசுக்கன்று அடிபட்டு இறந்து விடுகிறது. தாய்ப்பசு மணியை அடித்து விடுகிறது. கன்று இறந்த செய்தி கேட்டு அறவழி ஆட்சி வீழ்ந்ததே என வருந்துகிறான் மன்னன். இப்பசு அனுபவிக்கும் துயரை யானும் அனுபவிப்பதே அறம் என்று கடிந்து மைந்தன் மேல் தேர் செலுத்துகிறான். மன்னவன் செய்தது தன்கருமம். சுய தருமம். அதுதான் அரச கருமம்.

ஒருவனுடைய மனதை மாற்றி அமைப்பதே துன்பத்தை நீக்குவதற்கு ஏற்ற உபாயம். அதை அறிந்தவன் கண்ணன்.

முன்பு நமது தேகம் இருக்கவில்லை. இடையில் அது வந்தது. பின்பு அது இல்லாமற் போகும். ஆக்கை அழியும் போது ஆன்மா அழிவதில்லை. ஆத்மா கொல்லுவதும் இல்லை. கொல்லப்படுவதும் இல்லை. ஆயுதங்கள் ஆத்மாவை வெட்ட மாட்டாது.

உலகத்திலே பாவம் அதிகமாகும்போது இயற்கை சீறி எழுவதால் விபரீதங்கள் விளைகின்றன. இது பிரபஞ்ச தர்மம்.

அர்ச்சுனா நீ அறப்போரிலே நிற்கின்றாய், இதுவே உன் சுய தருமம். தன் கடமையாக வந்த தர்மத்தை தக்க நேரம் செய்யாதவன் பெருங்கேடு அடைவான். வெற்றி தோல்விகளை சமனாகக் கருதி போரின் பொருட்டு எழுந்திரு என உபதேசிக்கிறான் கண்ணன்.

நாம் உண்மை பேசுவது கடமை. அதனால் இன்னபயன் விளையவேண்டும் என்று விரும்புவது மடமை. அப்பயன் விளையாதபோது உண்மை பேசாது விடுதலும், கருதிய பயனைப் பொய்பேசி அடையலாம் என்று எண்ணுவதும் தவறு. பயன் கருதாது பணி செய்பவன் சித்தம் தெளிவடையப் பெற்றவன். நாம் இயற்றுகின்ற கருமத்தை கடவுளுக்கு ஒப்படைத்துவிட வேண்டும். கடவுளின் செயல்களில் ஒருபகுதி எம்மூலமாகவே நடந்தேறி வருவதால் நாம் கடவுளுக்கு கடமைப்பாடுடையோம்.

விமானங்களில் வானிலே பறக்கக் கற்ற மக்கள் கடலில் நீந்தக் கற்ற மக்கள் நிலத்தில் அமைதியாக வாழ முடியவில்லை. படுக்கையில் படுத்தவுடன் உறங்கவும் முடியவில்லை. எல்லாம் வேண்டும் என்ற பண்பு ஒட்டிக்கொண்டிருக்கும் வரை மனிதன் அமைதியைக் காணமாட்டான்.

மனிதன் பொருள்களில் ஆசை கொள்கிறான். ஆசை கைகூடாத பொழுது சினம் அடைகிறான். சினத்தால் மனக் குழப்பமும், குழப்பத்தால் நினைவின்மையும், நினைவு தவறுவதால் புத்தி நாசமும் உண்டாக இறுதியில் புத்திநாசத்தால் மனிதனே அழிந்து விடுகிறான். ஆசையை அடிமை கொண்டவனுக்கு உலகமே அடிமையாகிறது. மனம் அடங்காதவனுக்கு ஆத்ம சிந்தனையும் இல்லை. சாந்தியும் இல்லை.

அகம்வேறு புறம்வேறு ஆக இருப்பதால் மனிதன் பிறவிக்குள்ளே ஆழ்கிறான். மனமும் வாக்கும் செயலும் ஒன்றாக இருந்தால் ஆத்மசக்தி விருத்தியாகும். இறையருள் அங்கே வந்து பதியும். இந்த நிலையில் நாம் இல்லாமையால் எண்ணங்கள் வார்த்தைகள் பார்வைகள் சிதறி வாழ்நாளே சிதறிப் போய்விடுகிறது. ஆத்மா, பரமாத்மா என்ற வேறுபாடு இருக்கும்வரை இருள்உண்டு. அறியாமை உண்டு.

கருமயோகி ஒருவன் மந்திர தீட்சை பெறவேண்டும் அல்லது குரு வாய்க்க வேண்டும் என்ற நியதியே இல்லை. அவன் அடைந்துள்ள மனநிலையே அவனுக்கு குருவாகிறது. அந்த மனநிலையே மந்திரமுமாகிறது. கருமயோகி தனது வாழ்வு அனைத்தையும் பொது வாழ்வு ஆக்கிவிடுகிறான். அவன் பணிபுரியும்போது மனதை நடுநிலையில் வைக்கிறான். மந்திரத்தின் துணையில்லாது மனதைப் பக்குவப்படுத்துகிறான். மனம் அடங்குகிறது.

கருமம் செய்யாதிருத்தலைவிட கர்மம் செய்தல் சிறந்தது. கருமம் செய்யாத நிலையில் உடலை நடாத்தவும் முடியாது. கருமயோகத்தை சிறப்பாகக் கடைப்பிடிக்கும் ஆத்ம சாதகனிடம் பக்தி, ஞானம் இடம்பெறுகிறது.

கருமம் தன்னளவில் புண்ணியமும் இல்லை பாவமும் இல்லை. குறிக்கோளினாலேயே புண்ணிய பாபங்களை அது சென்று சேருகிறது. தன்நலனையே நாடிச் செய்யும் தேவாராதனை கூட மாசு அடைந்து பாபச்செயலாகி விடுகிறது. தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் போது தீயவர்களைத் தகர்த்து எறியப் புரிகின்ற வெம்போர் புண்ணியச் செயலாகிவிடுகிறது.

அறிவும் ஆற்றலும் வேறு பண்பாடு வேறு. பண்பாட்டுடன் கலவாத அறிவு வேண்டாதது. பண்பாட்டால் மட்டுமே உலகம் நிலைபெறும். தமக்கென்ற கடமையைச் செவ்வனே செய்து உயர்ந்தவர்களும் பண்புடையவர்களே. முறைப்படி செய்கின்ற கருமமே யக்ஞம் என அழைக்கப் பெறுகிறது. முறையான கருமத்தினால் நாட்டிலே மழை பெய்கிறது என்றால் அந்நாட்டிலே நல்லவர்கள் வாழ்கின்றார்கள் என்பது தெரிகிறது. இம்மைப் பயனுக்காகவாவது அவர்கள் கருமம் செய்து கொண்டிருக்கட்டும் என்ற பெரு நோக்குடன் ஞானியர்கள் இகலோகத்திற்கு முன்மாதிரியாகக் கருமங்களில் ஈடுபட்டு மற்றவர்களையும் ஈடுபடுத்த வேண்டும். உயிரையே கொடுக்க வேண்டிவரினும் தன் கடமையினின்றும் பிறழாதிருப்பவனே வீரன். சுயதர்மத்தில் இறந்துபடுவதுகூட நலமாகும்.

கருமத்தின் குறிக்கோள் ஞானம் பெறுதலேயாகும். உள்ளத்தைத் தூய்மையாக்கி தெருப் பெருக்குவோனும் தேசத்தை ஆள்வோனும் செயல் புரிந்தால் ஞானத்தை அடையமுடியும். கருமயோகமும் சந்நியாசமும் ஒன்றே. உண்மைத் துறவும் பற்றற்ற கருமமும் சாதகனைப் பரம் பொருளிடத்து எடுத்துச் செல்வனவாகும்.

நீதி தவறிய அரசர்க்கு அறமே யமனாகும் என்பதும் மாசிலாக் கற்புடை மாதரை மண்ணுலகும் விண்ணுலகும் வணங்கும் என்பதும், தாம் செய்த ஊழின் வினை விளைந்தேயாகும் என்பதும் சிலப்பதிகாரம் போதிக்கும் பேருண்மைகளாகும்.

நல்லவர்களைக் காக்கவும், கெட்டவர்களை அழிக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும் யுகந்தோறும் நான் அவதரிக்கின்றேன். நாட்டிலே தர்மம் தலைகீழாகும்போது அவதார புருஷர்கள் தோன்றுகிறார்கள். நாட்டிலே தோன்றும் நோயும் பஞ்சமும் துன்பமும் ஆண்டவன் அருளிய கொடை என்றே கருதவேண்டும்.

மதி எப்படியோ வழி அப்படியேயாகும். சிந்தைக்கும் சொல்லுக்கும் எட்டாத பரம்பொருளை மனம் சிந்திக்கிறது. சொல்விளக்க முயல்கிறது. இத்தகையதொரு முயற்சியில் மக்களுக்கிடையே கருத்துவேற்றுமை உலாவத் தொடங்குகிறது. மனிதன் தன் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப மூலப் பழம்பொருளை விளக்கப் பார்க்கிறான். இதனாலேயே மதபேதம் ஏற்படுகிறது. கருத்து வேற்றுமை நிலவவே மதத்தின் பெயரால் சச்சரவுகள் சண்டைகள் ஆரம்பமாகின்றன. கொலைகளும் நிகழ்ந்துவிடுகின்றன. ஒரே உண்மைப் பொருளைக் குறித்து என்தெய்வம் உன்தெய்வம் என்று வீணில் வழக்காடுகிறார்கள். எத்தனையோ கோடி மக்கள் வாழும் உலகில் அத்தனை பேரும் ஒரே கருத்துடன் வாழ்வார்கள் என நாம் எதிர்பார்க்க முடியாது. இக்கருத்து வேற்றுமைகளும் மதத்தின் பேரில் ஏற்படும் சச்சரவுகளும் இருக்கத் தான் செய்யும்.

ஒருவனுடைய குணத்தையும் கருமத்தையும் நிர்ணயிக்க பிறப்பு முக்கிய காரணமாகாது. பண்பும் செய்தொழிலுமே பரிபாகத்தை விளக்கும். பிறப்பை வைத்துக் கொண்டு நான்கு வர்ணங்களை நிர்ணயிப்பது தத்துவத்துக்கு ஒவ்வாததவையாகும். சத்தியகாமன் பொதுமாது ஒருத்தியின் மகன். அவன் பிறப்புப்பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை. சத்தியமே பேசியதால் பிராமணனாகவே இருக்க வேண்டும் என குரு யூகித்தாராம். ஆகவே சத்தியம் (உண்மை) பேசுபவர்கள் மேல் சாதியினர் என்று நாம் அறிய வேண்டும். பிறப்பினால் வேற்றுமையை நிலைநாட்ட முயல்கின்ற செயல் அறிவுடைமை ஆகாது.

கருமத்தின் போக்கு அறிதற்கு அரியது. கருமம் செய்தலின் கர்மம் செய்யாத நிலையையும் கர்மம் செய்யாத நிலையில் கருமம் நிகழ்தலையும் எவன் காண்கின்றானோ அவன் மனிதர்களுக்குள் மேதாவி. அவனே யோகி. செய்யவேண்டியன செய்து முடித்த தீரன்.

மனது வெளிவிசயங்களுக்கு உரியதல்ல. பரம்பொருளுக்கே உரியது என்ற எண்ணம் நிலைக்கும்போது விவேகம் உண்டாகிறது. தனக்குச் சொந்தமான பொருளைத் தனக்கென்று கொள்ளாது பிறருக்குப் பயன்படும்படி செய்வது யாகமாகிவிடுகிறது. கற்பூர தீபாராதனையைப் பார்க்கின்றோம். கற்பூரம் எரிந்தால் எஞ்சியிருப்பது ஒன்றும் இல்லை. வாழ்வு நிலையற்றது என்ற தத்துவத்தை அது காட்டித் தருகிறது.

எவருடைய பாவத்தையோ புண்ணியத்தையோ ஆண்டவன் பொருட்படுத்துவதில்லை. ஞானம் அறிவீனத்தால் மறைக்கப்பட்டிருப்பதால் உயிர்கள் மயக்கமடைகின்றன. எவர்களுடைய அறிவீனம் ஆத்ம ஞானத்தினால் அழிக்கப்படுகின்றதோ அவர்களுக்கு ஞானமானது சூரியனைப்போல் பரம்பொருளை (அதாவது உண்மைப் பொருளை) விளங்கச் செய்கிறது.

அறிவால் பார்க்காமல் அருளால் எதையும் பார்க்க வேண்டும் என்பதும், உணர்வு பிறந்தால் அருள் பிறந்திருக்கிறதென்பதும் சொல்லாமலே விளங்கும். அண்ணல் காந்தியின் வாழ்வை நாம் எடுத்துக் கொண்டால் அவர் மறைவதற்கு முன் மங்காப்புகழ் பெற்றார். நெஞ்சில் உரம், நேர்மைத்திறன், குறிக்கோள் மறவா மாண்பு இவற்றால் அழியாப்புகழ் பெற்றார்.

உள்ளத்தில் உண்மை, வாயில் வாய்மை, செயலில் மெய்ம்மை அவரை மாணிக்கமாய் திகழச் செய்தன. அவர் வாழ்வு ஆண்டவன் காட்சி கொடுத்ததால் உயரவில்லை. கனவில் தோன்றியதால் வளரவில்லை. அப்பெருமகனார்

மறைந்தபோது அகில உலகமும் கவலை அடைந்தது. தன்னைத் தன்னாலேயே உயர்த்திக் கொள்ள வேண்டும். தன்னைத் தன்னாலே வெல்லாதவன் தனக்குப் பகைவன்போல் கேடு சூழ்கிறான். யோக நிலையில் ஏறவிரும்பும் யோகிக்குத் தொழிலே சாதனமாகச் சொல்லப்பெறுகிறது. அந்நிலையில் அவனுக்கு சாந்தம் கருவியாகிறது.

கடவுளின் அம்சம் இல்லாத எதுவும் உலகில் இல்லை. அரசன் அரசாட்சி செய்வதுபோல் ஆண்டவன் கயிலாயத்திலோ சத்தியலோகத்திலோ வைகுண்டத்திலோ வசித்து உலகைப் பாதுகாக்கவில்லை. கண்ணில் தெரிவதெல்லாம் கடவுளின் தோற்றம். சிவம் என்ற சொல்லுக்கு பொருள் உண்மை (மங்களம்).

நாம் மேல்நிலைக்குப் போகவேண்டுமானால் எமது கைவசம் உள்ளவைகளை பயன்படுத்தும் வழிகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். முறையாக அளவெடுத்துக் கையாண்டால் மட்டுமே அவை நம்மை மேல்நிலைக்கு எடுத்துச் செல்லும். ஆண்டவனே ஓர் எல்லை வகுத்து நம்மைப் படைத்துள்ளான். போகிகளுடைய வாழ்வு இன்பத்தில் தொடங்கி துன்பத்திலேயே முடியும். அதாவாது போகி ரோகி ஆவான், யோகி ஆகமாட்டான். இவ்வாறு அனுபவமறிந்த பெருமக்களது ஆராய்ச்சியின் விளைவே யோகம் எனப் பெயர் பெற்றது. அளவுடன் கருமத்தைச் செய்பவன் கருமத்தைத் திறம்படச் செய்கிறான்.

அழிவு இன்று மிக எளிதாக இருக்கிறது. உலகில் துன்பமும் நெருக்கடியும் பஞ்சமும் பாதகமும் பெருகிவரும் போதெல்லாம் உயர்சான்றோர்கள் புதுப்புதுக் கருத்துகளை எடுத்துக்காட்டி உய்யும்வழி சொல்கிறார்கள் மனித இனம் அந்த அறவுரைகளைப் பின்பற்றினால் மட்டுமே மனிதப் பண்புடன் வாழமுடியும். பணத்தின் செல்வாக்கினால் சட்டத்துக்கும் சமுதாயத்துக்கும் உண்மைக்கும் கடவுளுக்கும் அஞ்சாமல் வாழ்கின்ற வாழ்க்கை நீடிக்காது. பணத்தாலும் பலத்தாலும் ஏமாற்றுகின்ற வாழ்க்கை ஒருநாள் மறைந்து ஒழிந்துபோகும் என்பது மறைக்க முடியாத உண்மை.

மனிதன் எவ்வளவு முன்னேறினுலும் உண்மை ஞானம் நடு நின்று காக்காவிட்டால் அவன் அழிவுப் பாதையில் செல்கின் கின்ருன் என்றுதான் சொல்லவேண்டும். ஐந்து பூதங்களின் சேர்க்கையால் விளையும் அழிவுகளில் ஒன்றையேனும் மனிதன் தன் அறிவாலும் ஆற்றலாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது.

மனிதன் கப்பலில் ஏறிக் கடலைக் கடக்கலாம். ஆனல் நடுக் கடலிலே புயற்காற்று கப்பலைச் சுக்கு நூருக்கி விடுகிறது. மனிதன் இதைக் கொஞ்சமாவது சிந்தித்துப் பார்க்க வேண்டும். உண்மை என்ற ஒன்றுக்கு அஞ்சி வாழவேண்டும். நல்லதை எண்ணவேண்டும், நல்லதைச் செய்யவேண்டும். மனிதனுடைய எண்ணத்துக்கும் நோக்கத்துக்கும் தக்கபடியே அவனுக்கு சன்மானம் கிடைக்கிறது. துன்பம் எல்லாம் பிறருக்குத் துன்பம் செய்தாரிடம் செல்லும். துன்பம் இல்லாமையை விரும்புவோர் பிறருக்குத் துன்பம் செய்யார்.

எல்லாவற்றுக்கும் மூலமாக இருப்பது மனம். மனத்தில் ஒருமைப்பாடு இருந்தால் எல்லாவற்றிலும் ஒருமைப்பாடு இருக்கும். மனமும் வாக்கும் செயலும் ஒன்ருக இருந்தால் ஆத்ம சக்தி விருத்தியாகும். அப்போது வாக்கில் ஒளி உண்டாகும். செயலில் ஒளி உண்டாகும். அந்த ஒளியினுல் இன்ப அனுபவம் தோன்றும்.

கடவுளை நினையாதவன் சாவு வருகிறபோது கடவுளை நினைக்கிருன். (கடவுள் — உண்மை) கண்ணிலே நீர் வருகிறது. மனைவியையும் மக்களையும் பிரியமுடியாமல் அழுகிருன் என நாம் நினைக்கிருேம். உண்மை அதுவல்ல. உண்மையான இறைவனை ஆயுள் உள்ளபொழுது உணரவில்லையே என்றுதான் அப்பொழுது அழுகிருன். பணத்தினுல் எதையும் சாதிக்கலாம் என்ற நம்பிக்கையும் முகத்துதியால் வயிறு பிழைக்கும் மானமற்ற மக்கள் கூட்டமும் பெண்ணும் பொருளும் போகமும் கைகூடிவிட்டால் அவன் ஏன் கடவுளை நினைக்கிருன்? உண்மை கண்ட பெரியோர்கள், உத்தமர்கள், அடியார்கள் ஆகிய தவச் செல்வர்களைப் பற்றி சிந்திக்க நேரம் எங்கே அவனுக்கு.

ஒரு மரத்திலே ஆயிரம் ஆயிரம் விதைகள் உண்டாகின் றன. இந்த விதைகளிலே ஒரு சிலதான் நல்ல மரங்களாக வளர்ந்து பயன் தருகின்றன. உண்மையைச் சொல்லப் போனுல் மனிதனுகப் பிறந்து மனிதனுக வளர்ந்து மனிதருள் மாணிக்க

மாகி வாழ்பவர்கள் மிகமிகச் சிலரே. அவர்களுக்குள்ளே உயிர்களுக்கு உதவவேண்டும் என்கிற அறிவு கைவரப்பெற்று தானம் செய்கிற பண்பும் இச்சை அகற்றி தவம்பேணும் உறுதியும் நிலைபெற வாழ்வோர் ஒரு சிலரேயாவர். இவை ஒருவனிடம் அமைந்துவிட்டால் அவன் அரிதான பேற்றைப் பெற்றவன். அவனுக்கு வானவர் நாடு வழிதிறக்கும் என்கிறார் ஔவைப் பாட்டி.

'' அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிது அரிது மானிடராதல் அரிது
மானிடராயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்த லரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செயலரிது
தானமும் தவமும் தான் செய்வராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே. ''

மிகவும் அல்லல்பட்டுத் தேடிய பொருளிடம் நமக்கு ஆர்வமும் பற்றும் அதிகம். பல சோதனைகளில் வென்று புடம் இட்ட பொன்போல ஒளிபெற்ற நாவுக்கரசர் வாழ்க்கை நம் உள்ளத்தை உருக்கும் தன்மையுள்ளது. அவர் நம்மைப்போல் உலகியலில் உழன்று வருந்தியவர். நமக்கும் திருவருள் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஊட்டுகிறது அவர் வாழ்க்கை.

இறைவனை வழிபடும் வகையிலும் மூர்த்தி பேதங்களிலும் கலக்கம் அடையாமல் ஒரே ஈசனை எல்லோரும் பலவித மூர்த்திகளாகக் கொண்டு வழிபடுகிறார்கள் என்ற பேருண்மையை நன்கு உணரவேண்டும். இந்தப் பேருண்மையை உணர்ந்து உள்ளம் பரிபாகம் அடைந்தால் பின்னர் எந்தத் தெய்வமும் எந்த விக்கிரகமும் அவனே ஆகும். பல தெய்வங்கள் இருப்பதாகப் பேசிக் கொள்ளுதல் அறிவீனத்தின் விளைவு. அண்ட கோடிகள் அனைத்துக்கும் மூலப் பொருளாயிருக்கும் தெய்வம் உண்மைப் பொருள் ஒன்றே ஒன்றுதான்.

மனிதனுடைய முயற்சியும் தெய்வச் செயலும் இணைந்தே செல்கின்றன. முயற்சிக்கு ஏற்றவாறே தெய்வ அனுக்கிரகமும் அமைகிறது. காரணத்துக்கு ஏற்ற காரியம் சதா காலமும்

ஒழுங்காக நடைபெற்று வருகிறது. காரணத்தைக் கொண்டு காரியத்தையும் காரியத்தைக் கொண்டு காரணத்தையும் தெரிந்துகொள்ளலாம். மகன் ஒருவனிடத்திலே காண்கின்ற பரிபாகத்தினால் இவன் பெற்றோர் எத்தகையவர் என்று அனுமானிக்கலாம்.

ஒருவனுடைய மனபரிபாகம் முழுவதையும் நாம் மட்டிட்டுக் கொள்ளமுடியாது. கெட்டவர்களிடமும் சில நல்ல பண்புகள் இருக்கின்றன. நல்லவர்களிடமும் சில வேண்டாத இயல்புகள் இருக்கின்றன. இக்காரணங்களால் நல்லவர்களுக்கு துஷ்டர்களும் துஷ்டர்களுக்கு நல்லவர்களும் மக்களாகப் பிறக்கின்றார்கள். காரணகாரியம் என்னும் விதிக்கு இவைவிலக்கு என எடுத்துக்கொள்ளக் கூடாது.

கர்த்தாவானவன் தக்கான் தகவிலன் என்பது அவனால் ஆக்கப்பட்ட எச்சத்தினின்றும் தெரிந்து கொள்ளலாம். நல்வழியில் கிடைத்த பணத்தினால் நல்லுள்ளத்தோடு அமைத்த அறநிலையம் வாழ்கிறது. உண்மைப் பொருள் உண்மையான முறையில் செயல்படாதுபோனால் அந்நிலையம் வாழமுடியாது.

மனிதன் தன்னைப் பக்குவப்படுத்துவதற்கே பல பிறவிகளை எடுத்துக் கொள்ளுகிறான். ஒரு பிறவியிலிருந்து வேறு பிறவிக்குச் செல்லும் மனிதன் பூவுலகிலிருந்து எப்பொருளையும் எடுத்துச் செல்வதில்லை. வினைப்பயன் (வினை-கருமம்) ஒன்றையே எடுத்துச் செல்லுகிறான். அவனது வினைப்பயனாகிய எச்சம் மேலானதாக இருந்தால் அடுத்த பிறவியில் அவன் மேல்நிலைக்குப் போகிறான். ஒரு மனிதனுக்கு இனிவந்து அமையும் பிறப்பு அவனது எச்சவினையிலிருந்து வருவது எனத் தெரிந்துகொள்ளலாம். நல் எண்ணத்தை வளர்த்து உண்மை வழி நாடுபவர் நல்ல பிறவிக்கு வழிதேடுகின்றனர். வினைப்பயன் இருக்குமளவும் பிறவிகளும் இருக்கும். வினை ஒரு முடிவுக்கு வரும்வரை பிறவிகள் மாறிமாறி வந்துகொண்டே இருக்கும். வினை என்னும் தடை போய்விட்டால் உடல் என்னும் கட்டு அவிழ்ந்து விடும்.

வாழ்க்கைப் போரிலே வெற்றி நம்முடையதென்று திடமாகச் சொல்ல முடியாது. ஆனால் போரிலே ஈடுபட்டேயாக வேண்டும். வெற்றி தோல்விகளைப் பொருட்படுத்தலாகாது.

ஒன்பது தரம் அடித்தும் உடையாத கல்லு பத்தாவது அடியில் உடைந்து போகிறது. பத்தாவது அடி பயனளித்தமைக்கு பயன் அழியாத ஒன்பது அடிகளும் காரணமாயின என்பதை எவரும் மறுக்க இயலாது. ஆண்டவனை அடைகின்ற முயற்சியும் இப்படிப்பட்டதுதான். இப்பிறப்பிலே வெற்றி கிட்டாது போனாலும் இன்னொரு பிறப்பில் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்ற திட நம்பிக்கை நமக்கு இருக்குமானால் உண்மைப் பொருளை அடைவது நிச்சயம்.

கடவுளின் பெயரால் பொய்வேசக்காரனாய் இருப்பதைவிட நாஸ்திகன் என்று சொல்லிக்கொள்வது நன்று பண்டைக் கால ஞானிகள் அனுபவத்தில் உண்மையை அறிந்திருந்தார்கள் என்றால் இக்கால மனிதனும் அதை அனுபவத்தில் பெற்றுந்தான் ஆகவேண்டும். ஏதோ சில கொள்கைகளையும் கருத்துக்களையுங்காட்டி அவர்களைத் திருப்திப்படுத்திவிடலாம் என்று எண்ணுவது அறிவுடைமையாகாது. மதத்தைப் பற்றியும் ஆண்டவனைப் பற்றியும் வீணில் பேசிக் கொண்டிருப்பதில் பிரயோசனம் எதுவும் இல்லை. இவற்றின் உட்பொருளை ஒவ்வொருவனும் உணரவேண்டும். சுய அனுபவத்தில் உண்மையை உணராதவன் மதவாதி அல்லன். அடிப்படைத் தத்துவ உண்மைகளை ஒருவன் என்றைக்கு ஞானக் கண்ணால் காண்கின்றானோ அத் தத்துவங்களின் சொரூபமாக தனது வாழ்க்கை அமைந்திருக்கிறது என்றும் அனுபவத்தை என்றைக்குப் பெறுகிறானோ அன்றுதான் அவன் மதத்தின் உண்மைப் பொருளை உணர்ந்தவன்.

புத்தகத்தைப் படிக்கத் தெரியாதவன் புத்தகத்தில் இருக்கும் உண்மையை உணர்ந்திருப்பானானால் அவன் தத்துவ ஞானியைவிடச் சிறந்தவன். ஆத்ம அனுபவத்தைப் பெறுவது மனிதனது இலட்சியமாய் இருக்கவேண்டும். கோயில்களுக்கு போவதாலும் நூல்களைப் படிப்பதினாலும் மெய்ஞானம் பெறலாம் என்று எண்ணி வாழ்நாள் முழுவதையும் அந்தகைய முயற்சிகளில் செலவு செய்யலாம். ஆனால் சமயத்தின் சாராம்சமான உள்ளத் தூய்மையையும் அந்த உண்மையின்றி ஓர் அணுவும் அசையாது என்ற அசைக்கமுடியாத பக்தியையும் நாம் பெறுவிடில் கடவுளை (உண்மைப் பொருள்) தேடும் முயற்சி வீணானதாகும்.

உலகில் நான் ஒருவனே சுத்தமானவன். மற்றவர்கள் தனக்குப் பக்கத்தில் வந்தாலோ, தனது உணவுப் பொருளைத் தொட்டாலோ தனது பவித்திரம் (கடவுள் தன்மை) போய்விடுகிறது என்று கருதுபவனும் உண்டு. அப்படிப் பட்டவன் உருப்படியாக முடியாது. எல்லோரும் ஆண்டவன் குழந்தைகள். இயங்கும் உயிர்கள் அனைத்தும் தெய்வசொரூபம்.

ஆண்டவனின் அம்சம் இல்லாத எதுவும் இந்த உலகத்திலே இல்லை. அவன் கைலாயத்திலோ வைகுண்டத்திலோ இருந்து உலகைப் பாதுகாத்துக் கொண்டிருக்கவில்லை. காற்றும் ஆகாயமும் ஆண்டவனின் திருவுருவங்களே. பொருள்கள் யாவும் செயல்கள் யாவும் பரம் பொருளிடமிருந்து வந்தவை என்று உணரவேண்டும். இவ் உண்மையைப் பற்றிப் பேசினால் போதாது. எண்ணினால் எழுதினால் போதாது. சுய அநுபவத்தால் இதை நாம் உணரவேண்டும். யாவும் சிவமயம் (சிவம் = உண்மை) என்று அனுபவத்தில் அறிகின்றவன் சுவர்க்கத்துக்குப் போக ஆசைப்படவும் மாட்டான். நரகத்துக்குப் போக அஞ்சவும் மாட்டான். வினைப்பயனுக்கு (நாம் செய்த செயல்களின் பிரதிபலிப்பு) ஏற்றவாறு பெருமையும் சிறுமையும் நம்மை வந்தடைகின்றன. ஒரு சிலரைத் தண்டிக்கவும் வேறு சிலருக்கு சன்மானம் வழங்கவும் ஆண்டவன் பரலோகத்தில் இருக்கவில்லை. எல்லோரது உள்ளத்திலும் உணர்வுக்கு உணர்வாய் அறிவுக்கு அறிவாய் எழுந்துள்ள தெய்வம் மேலானதா? அல்லது இருக்குமிடம் தெரியாது எங்கோ மறைந்து கிடக்கும் தெய்வம் மேலானதா? என்பதைச் சிந்தித்து உண்மையை அறியவேண்டும்.

விஞ்ஞானிகள் நிகழ்ச்சிகளை உற்றுநோக்கி அறியும்போதும் ஆய்வுகளைச் செய்யும்போதும் உள்ளதை உள்ளபடி அறியவும், அறிந்தபடி உரைக்கவும் பழகிக்கொள்கிறார்கள். இம் மாதிரியான பயிற்சியால் அவர்கள் புத்தி பரிசுத்தமடைந்து உண்மையைக் காண்பதில் திறமையும் அடைகிறது.

மனதைத் தூய்மையாக்கி உண்மையைத் தியானம் பண்ணி உண்மையைக் கண்டார்கள் ஞானிகள். மனதின் தன்மையை உள்முகத் தியானத்தால் ஆராய்ந்து உண்மையைக் காணல்

பண்டைக்கால வழி. புற உலகின் தன்மையை புத்திக் கூர்மை ஆராய்ச்சியால் அறிந்து அப்பாலுள்ள உண்மையைக் காணுவது பௌதீக விஞ்ஞானிகள் வழி. பல பொருள்களாய் இருந்தவைகள் எல்லாம் ஒரு பொருளில் வந்து முடிபு பெற்றிருக்கின்றன என்னும் உண்மையைக் கண்டு இறுதியில் இருப்பது ஒரு பொருளே என்ற முடிபுக்கு அந்த அறிமுறை விஞ்ஞானம் வந்திருக்கிறது. ஆனல் அந்த ஒரு பொருளை விளக்குவதற்கு மட்டும் அந்த விஞ்ஞானத்தினல் முடியவில்லை.

நாம் அதிகமாகக் கற்பிக்கின்ற வேறுபாடுகள் எல்லாம் எல்லையற்ற ஓர் உண்மையின் பாகங்கள், பகுதிகள், கூறுகள் ஆகும். இந்த வேறுபாடுகளும் ஓர் எல்லையற்ற உண்மையின் தோற்ற அளவிலே உள்ள வேறுபாடுகளே.

வெவ்வேறு மதத்துக்குரிய தெய்வம் வெவ்வேறு உண்டு என்று கருதுகிறர்கள். இதனல் 'பல தெய்வங்கள் என்ற கருத்தும் மக்களுக்கிடையில் வேரூன்றிவிடப் பார்க்கிறது. உண்மையைச் சொல்லப்போனல் மக்களின் இயல்புக்கு ஏற்ப மதங்கள் பலவற்றை தோற்றுவித்து எல்லாவற்றிற்கும் நடுநாயகமாக இறைவன் (உண்மை) விளங்குகின்றன்.

மனதுக்கும் உட்கொள்ளும் உணவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உணவிலுள்ள ஸ்தூலப்பகுதி மலமாககவும் நடுப்பகுதி மாமிசமாகவும் சூட்சுமப்பகுதி எண்ணமாகவும் மாறுபாடடைகிறது.

பெரிய ஆலமரத்தையும் அதன் கிளைகளையும் உண்டாக்கும் சீவசக்தி ஆலம் விதையினுள் அடங்கியிருக்கிறது. அது உன் ஊனக் கண்ணுக்குத் தெரியாது. ஞானக் கண்ணைக் கொண்டு அவ்விதையினுள் உள்ள மரம் முழுவதையும் நீ அறிய முடியும். அந்த விதையின் உள்ளே இருக்கும் சூட்சுமப் பொருளே நீ ஆவாய்.

கரைந்துபோன உப்பைக் கண் காணவிட்டாலும் நா உணர்வதுபோல் அண்டமெங்கும் செறிந்த பரம்பொருள் இந்திரியங்களுக்கு எட்டாவிட்டாலும் புத்தியில் பிரகாசிக்

கும். அந்த ஆத்ம சொரூபமே நீ ஆவாய். நீயே பிரம்மம் ஆவாய். பிரம்மம் என்பது உனக்கு அந்நியமானதல்ல.

சூரன் தலைகால் தெரியாமல் நடந்தவன். நீ எந்த அக்கிரமமும் செய்யலாம் என்று சொல்லிக் கொடுக்கிறார் சுக்கிராச்சாரியார். இந்த உபதேசத்தினால் 108 யுகம் அரசு செய்த சூரபன்மன் அழிந்துபடுகிறான். இளமையிற் கல்வி சிலையில் எழுத்தாகி சூரன் இருதயத்தில் இருப்பாக இருந்ததால் தன் பெருங்கிளையுடன் கெடுகிறான். அதற்கு வித்திட்டவள் மாயை. சூரனின் அன்னை. அன்றைக்கு தந்தை காசிபர் உபதேசித்தபடி சூரன் நடந்திருந்தால் கந்தபுராண முடிபு வேறாக இருந்திருக்கும். சூரனை அறத்தின் வழிப் படுத்தி வாழ வழிவகுக்க விழைந்தார் காசிபர். இம்மை மறுமை இருமையிலும் இன்பம் தருகின்ற பொருள் தருமம் என்று சொல்லிக் கொடுக்கிறார். ஆனால் விதி விடவில்லை. சிறுவருக்கு இத்திறம் செப்பலாகுமோ என்று கண்டிக்கிறாள் மாயை. சூரன் அதர்மத்தில் வளர்ந்து செய்யத் தகாதது அத்தனையும் செய்கிறான். ஞானப்பொருளால் அகங்காரம் அழியப்பெற்று நற்கதி அடைகிறான்.

ஆத்மா பிறப்பற்றது மாறுதலில்லாதது. எங்கும் இருப்பது. என்றும் உள்ளது. கர்மயோகம் ஞானயோகம் இரண்டிலும் ஞானயோகமே விரைவில் பலனை அளிக்கும். எனினும் கரும யோகமே செய்யத்தக்கது.

உடம்பு இருக்கும் வரையில் மனிதன் ஏதாவது ஒரு தொழில் செய்வது இயற்கையாகும்.

தருமர் தருமம் அறிந்தவர், வழி தவறாதவர். ஆனால் விதி யாரைத்தான் விட்டது. நாடிழந்து நகரிழந்து துயருறுகிறார்.

மக்கள் வாழ்க்கையில் நிகழும் எழுச்சி, வீழ்ச்சி, உயர்வு, தாழ்வு, ஆக்கம், கேடு, நன்மை, தீமை, உடைமை, வறுமை, இன்பம், துன்பம் ஆகிய எல்லாம் ஒரு நியதிக்குட்பட்டே அமைந்து வருகின்றன. உற்றுப் பார்த்தால்

ஆண்டவன் ஆட்சிமுறை அங்கே தெரிகிறது. வாழ்விலே நாம் நினைப்பவை எல்லாம் நடந்துவிடுவதில்லை. சகல செல்வங்களுடன் வாழ்பவர்களும் நினைப்பதைச் சாதிக்க முடியாமல் சஞ்சலப்படுகிறுர்கள். இந்த உலகத்திலே பாம்பினுல், நோயினுல், யுத்தத்தால் மக்கள் மாண்டு மடிகிறுர்கள். உண்மையைச் சொல்லப்போனுல் காலனுல் முன்பே கொல்லப்பட்டுள்ளவர்களின் சாவுக்குப் பாம்பும் நோயும் யுத்தமும் நிமித்த காரணங்களாகும்.

என்பணி செய்பவன் என்னைக் குறியாகக் கொள்பவன். என்னிடம் பக்தி பண்ணுபவன் பற்று அற்றவன். எவ்வுயிர்களிடத்தும் வெறுப்பு அற்றவன் எவனே அவன் என்னை அடைகின்றுன் என்கிறுன் கண்ணன்.

அகம் புறம் ஆகிய இரண்டு நிலைகளிலும் அனைத்தையும் தியாகம் பண்ணுவதும் அவசியமாகின்றது. உலகப்பற்று சிறிதளவாவது உன்னிடம் இருக்குமானுல் நிர்க்குண நிராகாரப் பிரம்ம உபாசனை உனக்கு வாய்க்காது. ஞானத்திலும் தியானம் சிறந்தது. தியானத்திலும் கருமபலத் தியாகம் உயர்ந்தது.

உடம்பினுக்குள்ளே உத்தமனுகிய இறைவன் (உண்மை) இருக்கின்றுன் என்பதை உணர்ந்தபின் உடம்பைப் பாதுகாப்பதோடு நில்லாமல் அந்த உததமனைக் கண்டு இன்புற முயலவேண்டும். அண்டத்தின் முடியிலும் பகிர் அண்டத்திலும் ஞானிகள் தேடும் பொருள் நம் உள்ளத்தின் 'உள்ளே இருக்கிறது. முத்தியைப் பற்றிய நாட்டம் மனிதனுக்கு உண்டாவது இயல்பு. அது புற உலகிலிருந்து வந்துவிடும் என்று எண்ணுவது தவறு. நாம் நித்திய முத்தர் என்பது புலப்படும்போது இடுக்கண்கள் மனத்தடுமாற்றம் முதலியன மறைந்தொழிகின்றன. அப்போது மெய்ப்பொருளின் காட்சி தோன்றுகிறது.

தற்பெருமையின்மை, பொறுமை, நேர்மை, தூய்மை, விடாமுயற்சி, தன்னடக்கம், அகங்காரமின்மை, மக்கள், மனைவி, மனை முதலியவற்றில் பற்றின்மை, மனம் நடுநிலை

நிற்றல், ஜனக்கூட்டத்தில் வெறுப்பு, ஆத்ம ஞானத்தில் நிலைபெறும் விடாமுயற்சி, உண்மைப் பொருள் ஆராய்ச்சி ஆகிய இவை எல்லாம் ஞானம் என்று கூறப்பெறும்.

நீர் படித்தவை எல்லாம் வெறும் பெயர்களைப் பற்றின வையே. அவற்றைவிட மேலானது ஒன்று உண்டு. அது மெய்ப்பொருள். அளவுகடந்தது எதுவோ அதனைத் தெரிந்து கொள்ள வேண்டும். எங்கு வேறு ஒன்றைக் காண்பதில் லையோ, வேறொன்றைக் கேட்பதில்லையோ வேறொன்றை அறிவதில்லையோ அது முடிவிலி. அது அழிவற்றது. அதுவே ஆத்மா என்று ஆத்ம ஞானத்தை நாரதருக்கு உபதேசிக் கிறார் சநத்குமாரர்.

ஞானத்தை சிலர் தியானத்தால் தெளிவான அறிவால் உணர்கின்றனர். சிலர் ஞானயோகத்தினாலும் சிலர் கரும யோகத்தினாலும் ஆத்மாவை உள்ளத்தில் உணர்கின்றனர். கருமயோகம் இராசயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகிய நான்கு யோகங்களுக்கு இடையில் ஏற்றத் தாழ்ச்சி என்பது இல்லை. அவரவர் மனப்பான்மைக்குத் தக்கதாக நின்றொழுகி நிறைநிலை எய்தலாம். செய்யும் செயல்களை இறைவன் பொருட்டு செய்து பழகுதலையே கருமயோகம் நமக்குச் சொல்லித் தருகிறது. தன்பொருட்டுச் செய்யும் செயல்கள் எல்லாம் இறைவன் பொருட்டுச் செய்வதாக அமைவது கருமயோகம்.

செய்யும் தொழிலை ஆண்டவனுக்கு அர்ப்பணித்து விட் டால் அது தொண்டாகி விடுகிறது. நாம் நம்மை உயர்த் திக்கொள்ள வேண்டுமானால் செய்யும் தொழில் எதுவானா லும்சரி நமக்கு ஆண்டவன் இட்டபணி என்ற மனநிறை வுடன் செயல்புரிய வேண்டும்.

ஒருவன் மற்ற சீவராசிகளுக்கு உண்டாக்கும் இன்பத் துக்கும் துன்பத்துக்கும் தகுந்த தண்டனையோ வெகுமதியோ அடைவது நிச்சயம் என்பதை எவரும் மறக்க முடியாது, மறுக்கவும் முடியாது. நாம் எண்ணும் எண்ணமும் செய் யும் செயலும் நம்மையே தாக்குகின்றன. இரகசியமான

மனத்தோற்றம்கூடத் தன்பலனை உண்டாக்கியே தீரும். நம்முடைய ஆத்மாவை கருமத்தால் ஒவ்வொரு கணமும் தட்டிக்கொண்டே இருக்கிறோம். உடலை விட்டுப் பிரியும் போது வாழ்நாளில் செய்த செயல்களுக்கும் எண்ணிய எண்ணங்களுக்கும் அமைய ஆத்மா மறுபிறப்பை எடுக்கிறது. வாழ்நாளை எப்படி உபயோகித்தோமோ மறுசென்மத்தின் தலைச்சுமை அப்படியே ஆகிவிடுகிறது.

உலகத்திலே ஒருவன் நல்லவனாகவும் இன்னொருவன் தீயவனாகவும் வாழ்வதற்கு ஏதோ ஓர் உண்மைக் காரணம் இருக்கிறதென்பதை அடிக்கடி நினைவுக்குக் கொண்டு வருதல் வேண்டும். சத்துவ, ராசத, தாமத முக்குணங்களின் செயலே வாழ்வையும் தாழ்வையும் தருகின்றன.

எப்போது இத்தேகத்தில் ஒவ்வொரு வாயில் வழியாகவும் ஞானமாகிய ஒளி பிரகாசிக்கிறதோ அப்போது சத்துவ குணம் ஓங்கியிருக்கிறதென்று உணரலாம். பேராசை, தொழிற்பெருக்கம், அமைதியின்மை பற்று இவை ரசோ குணத்தாலும் அறிவின்மை, முயற்சியின்மை, மதிமயக்கம் முதலியவை தமோகுணத்தாலும் உண்டாகின்றன. சத்துவத்திலிருந்து ஞானமும் ராசசகுணத்திலிருந்து பேராசையும் தமோகுணத்திலிருந்து அறிவீனமும், மதிமயக்கமும் பிறக்கின்றன.

தாமதகுணம் மிகுந்தவனிடத்தில் உறக்கம், காமம், குரோதம், அகங்காரம் போன்ற இயல்புகள் மிகுந்திருக்கும். ரசோகுணத்தோடு கூடியவன் எதைச் செய்தாலும் பகட்டுடனும் ஆடம்பரத்துடனும் செய்கிறான். சத்துவ குணத்தோடு கூடியவன் எதையும் ஆடம்பரமாகச் செய்வதில்லை. அமைதியாக ஒடுக்கமாக ஈசுவர சிந்தனையிலே கருத்தைச் செலுத்தி வருவான். யாருக்கும் எத்தகைய தீங்கையும் விளைவிப்பதில்லை. தாமதகுணம் மிகுந்தவன் முரட்டுச் சுபாவத்துடன் தான் வணங்கும் தெய்வத்தை திருப்திப்படுத்துவதற்காக ஆடு பலியிடுகிறான். அதே முரட்டு மனப்பான்மையுடன் கடவுளோடு போராடுகிறான். ரசோகுண பக்தியுடையவன் நெற்றியில் பகட்டாக மதசின்னங்களை

அணிந்து கொள்ளுகிறன். கழுத்தில் தங்கமணி கோத்த உருத்திராக்க மாலே அணிந்திருக்கிறன். பூசை செய்யும் போது பளபளவென்று இருக்கும் பட்டுமடி கட்டிக்கொள் ளுகிறன்.

சத்துவகுண பக்தி வாய்க்கப் பெற்றவன். தனது ஆத்ம சாதனங்களே பிறருக்கு காட்டிக்கொள்வதில்லே. ஆடம்பர வாழ்க்கை அவனிடத்தில் இல்லே. சாத்துவிகஉணவை மட்டும் அருந்துகிறன். ஈசுவர சிந்தனேயைத் தவிர வேறு எதிலும் தன்மனத்தை அவன் செலுத்த மாட்டான். நிஷ்காமிய கருமம் புரிவதன் விளேவாகச் சித்தசுத்தி உண்டாகிய பின்பே சத்துவகுணம் வருகிறது. சத்துவகுணம் நிறைந்தவர் விளம் பரம் செய்யாது தங்கள் சாதனங்களேச் செய்கின்றனர்.

இன்று வாழ்வில் இயற்கையைப் பெரிய அளவுக்கு வென்றுவிட்டோம். உலகத்தின் ஒரு கோடியிலிருந்து இன் ெனரு கோடிக்கு சிலமணி நேரங்களில் செல்ல முடிகிறது. இன்றும் பெருமைக்குரிய பல சாதனேகள் புரிந்துள்ளோம். ஆனல் வசதிகள் பெருகிய அளவுக்கு உள்ளத்திலே உயர்ந்த பண்புகள் ஓங்கி வளரவில்லே. அன்புக்கும் பரிவுக்கும் உண் மைக்கும் மனித சமுதாயத்திலே இடம் இல்லாமல் இருக் கின்றது. ஆகாயத்துக்கு அப்பாலும் செல்லக் கற்றுக் கொண்ட மனிதன் தன் உள்ளத்திலே அவ்வாறன விரிவை அடையவே இல்லே. மக்கள் மத்தியிலே அச்சமும் அவநம் பிக்கையும் உண்மையை பேசாத காரணத்தினல் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகின்றன. இன்னும் ஒரு சாரார் இவ்வுலகம் இன்பம் தரக்கூடியதாய் இருக்கிறது. செத்தபின் சிவலோகம், வைகுண்டம் என்று பேசுவது பைத்தியக்காரத்தனம். சுகபோகத்தை புறக்கணித்து கண் ணல் காணுத ஒன்றுக்கு நாம் ஏன் பாடுபட வேண்டும் என்று கேட்கிறர்கள்.

ஒரு காலத்திலே இன்பமாகத் தெரிவது இன்னெரு காலத்திலே இன்பமாக இருப்பதில்லே என்ற உண்மையை எல்லோரும் அறிவார்கள். இன்பம் துன்பமாக மாறுவதை

யும் அறிந்திருக்கிறோம். ஆகவே நிலையற்ற இவ்வுலக இன்பங்களைப் பெறவேண்டிய செயல்களைச் செய்துகொண்டு போவது அறியாமை என்பது நமக்கு விளங்குகிறது.

பிறவிகள் மேலும்மேலும் உண்டாவதற்கு நாம் செய்யும் வினை (தொழில்)ப் பயனே காரணம். இனிப் பிறவாத நிலைதான் உண்மையான மூலப்பொருளைச் சென்றடையும் மோட்சம் எனப்படும். பற்றின்மை எவ்வளவு வலிதாக வாய்க்கப் பெறுகின்றதோ அவ்வளவு விரைவில் சம்சார விருட்சம் வெட்டப்பெறும். இறைவனோடு ஒன்றுவதே நிறைவான வாழ்வு. அதுவே பரமசுகம். எவ்விடத்தை அடைந்தால் மறுசென்மம் எடுக்கவேண்டிய தேவை இல்லையோ அவ்விடமே இறைபதம். அந்த இறைபதத்திலே சூரியன் பிரகாசிப்பதில்லை. அங்கே சந்திரனும் இல்லை. சுயம் பிரகாசமுள்ள அவனைப் பின்பற்றியே அனைத்தும் பிரகாசிக்கின்றன. பிரபஞ்ச நடைமுறை அறிந்து கொள்ளும் ஞானம் வாய்க்கப் பெறும்பொழுது சம்சார மரம் சரிந்துவிழுகிறது.

மனிதனுகப் பிறந்திருக்கிற ஒவ்வொருவனும் நற்பண்பு தீயபண்பு ஆகிய இரண்டும் கலந்தவனே தவிர முற்றிலும் நற்பண்புள்ளவன் என்றோ தீயபண்புள்ளவன் என்றோ சொல்லிவிட முடியாது. இதிகாசங்களிலே வருகின்ற கதைகள் தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் இடையே எழுந்த போர் பற்றியனவே என்பது நமக்கு விளங்குகிறது. அறிவும் ஆராய்ச்சியும் மன அமைதியைத் தரும் என்று எதிர்பார்க்க முடியாது. எழுதப் படிக்கத் தெரியாத இராமகிருஷ்ண பரமகம்சரிடம் விவேகானந்த சுவாமிகள் உள்ளம் அடங்கினார்.

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்கால நிகழ்ச்சிகளும் மெய்ஞ்ஞானிகளின் மனக்கண்ணுக்குக் காட்சி தருகின்றன. உண்மையைப் பற்றிய ஞானம் அவர்களுடைய உள்ளத்திலே ஒளிவிட்டுக்கொண்டே இருக்கின்றது. அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய நூல்கள் நமக்குப் பெரிய பிரமாணங்களாகின்றன.

ஆகமம் அல்லது சாஸ்திரப் பிரமாணம் மெய்ஞ்ஞானிகள் நேரே தம் அனுபவத்தில் கண்ட உண்மை. மெய்ஞ்ஞானி சுய நலத்தை அறவே துறந்தவன். அவன் கைம்மாறு கருதி ஞானத்தை விலைக்கு விற்கமாட்டான். அவன் வழங்கும் உண்மைகள் பழைய பேருண்மைகளுடன் ஒத்தனவாகவே இருக்கும். அவனது ஞானப்பேறு தனக்கென்று வாய்ந்ததென உரிமை பாராட்டமாட்டான். மெய்ஞ்ஞானி அனுபவத்தில் கண்ட உண்மையை ஏட்டுக் கல்வியைப் படித்தறிந்தவர்கள் ஆராய்ச்சி செய்ய முடியாது. மனம் ஐம்பொறிகளையும் கடந்து பேருணர்வுக்கு எட்டுகின்ற ஒரு பொருளையே கடவுள் (உண்மை) என்கிறோம்.

ஒரே அன்னை வளர்த்த இரு சகோதரர்களில் ஒருவன் தொட்டதெல்லாம் பொன்னாகிறது. மற்றவன் தோல்வியைத் தவிர வேறெதையும் காணவில்லை. ஒருவன் தான் செய்த புண்ணிய வினையால் வளம்பெற்று வாழ்கிறான். மற்றவன் செய்த பாவவினையினால் துன்பம் அடைகிறான்.

இப்பிறப்பிலே அவர்கள் எவ்வித புண்ணிய பாவங்களையும் செய்யவில்லை. முற்பிறப்பிலே செய்தவை தொடர்ந்து வருகின்றன. காரணகாரியத் தொடர்பாய் நிகழ்ந்துவரும் இவ்வுலகில் தாம்தாம் செய்த வினையைத் தாமே அனுபவிக்கின்றனர். அவரவர் வினை (தொழில்) வழியே எல்லாம் ஆகும்.

செடியிலிருந்து விதை உண்டாகிறது. விதையிலிருந்து செடி முளைத்து வளருகிறது. காரணம் காரியம் ஆகிறது. காரியம் காரணம் ஆகிறது. நாம் முன்செய்த வினைகள் சமஸ்காரங்களாக மனத்திலே பதிந்து அடுத்த பிறப்பிலே அவை அந்த சீவனின் இயல்பாகி வடிவு எடுக்கும். அதனால் அந்த இயல்புக்குத் தக்கதாக சீவன் புதிய பிறப்பிலே வினை (தொழில்) ஆற்றுவான்.

நாம் செய்கின்ற வினைகளினால் மனதிலே விருத்தி (விதை) ஒன்று உண்டாகிறது. வினை முடிந்தபின் விருத்தி சூட்சுமநிலை எய்தி உள்ளத்தினுள்ளே அமிழ்ந்திருக்கும். அதாவது சித்தத்தினுள் இவ்விதைகள் யாவும் சமஸ்காரங்களாகக் குவித்து

வைக்கப் பெற்றிருக்கின்றன இந்தச் சமஸ்காரங்கள் காரண மாயிருந்து இவற்றிற்கேற்ற பலன்களை எதிர்காலத்தில் உண் டாக்குகின்றன.

சமஸ்காரங்களே மனிதனுக்கு வரும் மாறுதல்களுக்கு எல் லாம் காரணங்களாகின்றன. சமஸ்காரங்கள் தோற்றத்துக்கு வந்து உருவெடுக்கும்போது காரியங்களாகப் பரிணமித்துவிடு கின்றன. மரம், விதை காரணம் காரியமாவதுபோல முன்பு செய்த கருமங்கள் காரணமாயிருந்து இப்பொழுது நாம் செய் யும் கர்மங்களை (கருமம்) காரியங்களாக்குகின்றன. இதே கரு மங்கள் எதிர்காலத்தில் நாம் செய்யும் கருமங்களுக்கு காரணங் களாகின்றன. நாம் அனுபவிக்கும் இன்பதுன்பங்கள் யாவும் அவரவர் செய்த பழவினைப் பயன்களாகும்.

படைத்த குணத்துக்குத் தகுந்த சிரத்தை மனதிலே உண் டாகும். கொண்ட சிரத்தைக்கு (கவனம்) தக்ககுணம் வந்து சேரும். நல்ல குணம் படைத்தவன் நல்ல குரு. நல்ல மனோ பாவனைகள் கடவுள் வழிபாடு முதலிய நல்ல இலட்சியங்களை வைத்துக்கொள்வான். அவற்றால் அவனுடைய நல்ல குணம் மேலும்மேலும் வளரும். நல்ல குணமில்லாதவனுடைய புத்தி தகாத உபாசனை, தகாத உணவு, தூர் ஆசாரம், பொய்பேசு தல் இவற்றிலே செல்லும். அதனால் வாழ்வு பாழாகும். எந்த விதமான சிரத்தை நம்பிக்கையுடன் கருமங்களைச் செய்கின் றேமோ அந்த அளவுக்கு வாழ்வு வந்து அமையும், மரம் தன் உள்வலுவுக்கேற்ப வளர்வதுபோல் மனிதனும் கொண்ட சிரத் தைக்கு ஏற்ப வளர்கிறான்.

நாம் செய்யும் செயல்கள் நம் மனத்தைப் பண்படுத்தப் பயன்படுவனவாக இருக்கவேண்டும். மனப்பண்பாடு அடைவதே மனித வாழ்க்கையின் குறிக்கோள். " வினை விதைத்தவன் வினை அறுப்பான் தினை விதைத்தவன் தினை அறுப்பான் ".

புலனடக்கம் என்பது புலன்களை நல்லவழியில் செலுத்து வதேயாகும். பொறி புலன்களைச் செயலறச் செய்தல் அடக்கு தல் ஆகாது. அவற்றை இறைவன்பால் செலுத்தி உயரும் நன்னெறிக்கண் ஒழுகுதல் ஆகும்.

பிறப்பின் காரணமாகக் கற்பிக்கப்பெறும் உயர்வும் தாழ்வும் பொருள் அற்றன. மனிதன் தன் எண்ணங்களுக்கு ஏற்பவே உயர்வு தாழ்வை அடைகிருன். எண்ணங்களுக்கு அந்நியமானதாக மனம் இருக்கமுடியாது. ஆகவே எதை எண்ணுவது எதை விலக்குவது என்பதில் நாம் கருத்தாக இருக்க வேண்டும். உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளனவாக இருக்க வேண்டும்.

ஆதி இறைவன் சாதி வகுக்கவில்லை. ஒவ்வொரு மனிதனையும் தெய்வச்சுடரின் ஒரு பொறியாகக் காண்பது நல்லவன் பண்பாடு. ஒருவனுடைய குணத்தையும் கருமத்தையும் நிர்ணயிப்பதற்கு பிறப்பு முக்கிய காரணமாக இருக்கமாட்டது. பண்பும் தொழிலுமே பரிபாகத்தை விளக்கும்.

பிறரிடத்து வேலைக்காரனுக இருந்து இட்ட வேலையைச் செய்து சம்பளம் பெற்றுச் சீவிப்பவன் சூத்திரனுகிருன். இக்காலத்து குமாஸ்தாக்கள் எல்லாரும் சூத்திரர்களாம் நல்ல மனப்பான்மையுடன் ஆசிரியவேலை சய்பவர்கள் பிராமண கருமம் செய்கிருர்கள். இக்காலத்தில் புதியதாகத் தோன்றியுள்ள வக்கீல்களும் டாக்டர்களும் இடை அல்லது கடைத்தரமான வைசியர்களாம். இவர்கள் சமூகத்துக்கு செல்வத்தை உண்டுபண்ணுபவர்கள் அல்லர். செல்வத்தை ஏற்பவர்களாம் அரசாங்கத்தில் முறையாக ஆட்சி செலுத்துபவர்கள் க்ஷத்திரியகர்மம் இயற்றுகின்ருர்கள். வயிற்றுப் பிழைப்புக்காக என்று அத்தொழில்களை நாடுவார்களானுல். அவர்கள் சூத்திரர்களாகின்ருர்கள். உடல் வாழ்க்கை ஒன்றில் மட்டும் கருத்து வைத்திருப்பவன் சூத்திரன். அதற்கு மேல் உயர்ந்த சிந்தையும் செயலும் உடையவன் தொழிலுக்கேற்ப வைசியன் க்ஷத்திரியன் பிராமணன் ஆகின்ருன்.

தனதானியங்களை விருத்தி பண்ணலும் மூலப்பொருளைச் சேமிப்பதும் அவைகளைப் பயன்படு பொருள்களாக மாற்றி அமைப்பதும் வாணிகத்தின்மூலம் பங்கிட்டுக் கொடுத்தலும் வைசிய தர்மமாகும்.

காட்டுக்குப்போய் தியானம் செய்து யோகவலிமையினல் கொக்கை எரித்த பாலசந்நியாசி பிச்சைவாங்க அடுத்த ஊருக்குச் சென்ருர். ஒருவீட்டு வாயிலில் நின்று அம்மா அன்னங்

கொடு என்ருர் "மகனே சற்றுப்பொறு" என்று உள்ளேயிருந்து பதில் வந்தது. இதனைக் கேட்ட சந்நியாசிக்கு கோபம் வந்தது. யோக வலிமையில் கர்வம் கொண்டு நின்ருர். சிறுவனே உன்னைப்பற்றி அதிகம் எண்ணிவிட வேண்டாம். இங்கே கொக்கோ காகமோ இல்லை என்று மறுபடியும் மறுமொழி வந்தது. இதனைக் கேட்ட சந்நியாசிக்கு வியப்பு மேலிட்டது அந்த அம்மாள் வெளியே வந்ததும் அவள் காலிலே விழுந்து அந்த விசயத்தை எவ்வாறு அறிந்து கொண்டீர்கள் என்று கேட்டார். மகனே உன்னுடைய யோகமும் சாதனையும் எனக்குத்தெரியாது. நான் வாழ்நாளில் எனது கடமைகளைச் சரிவரச் செய்ய முயல்கிறேன். இளமையில் பெற்ருேருக்குப் பணிவிடை செய்தேன். மணம் முடித்தபின் கணவனுக்குப் பணிவிடை செய்து வருகிறேன். இதுதான் எனது யோகம். எனது கடமைகளைச் சரிவரச் செய்துகொண்டு வந்தமையால் அறிவு விளக்கம் உண்டாயிற்று. அதனுல் உனது மனத்தை அறிய முடிந்தது. இன்னும் விளக்கம் வேண்டுமானுல் அடுத்த ஊர்க் கடைத்தெருவில் ஒரு கசாப்புக் கடைக்காரன் இருக்கின்ருன். அந்தச் சான்ருேனிடம் நீ அறிய விரும்பிய உண்மைகளை அறிந்து கொள்வாய் என்ருள். கடைவீதியை அடைந்ததும் தான் நாடி வந்த இறைச்சித் துண்டங்களை வெட்டி வியாபாரம் செய்து கொண்டிருக்கும் மனிதனைக் கண்டார். இவனிடம் என்ன உண்மையைத் தெரியப்போகிறேன் என நினைத்தார். அப்போது கசாப்புக் கடைக்காரன் சிற்றூரிலுள்ள அம்மாள்தானே உங்களை என்னிடம் அனுப்பினுள். இதில் இருங்கள் வேலை முடித்துக் கொண்டு வருகிறேன் என்ருன். சந்நியாசிக்கு பெரிய வியப்பும் விந்தையுமாயிருந்தது. வேலைமுடிய வீட்டுக்கு அழைத்துச் சென்ருன். அங்கேயும் அவரை இருக்கச் சொல்லிவிட்டு தாய் தந்தையருக்குரிய பணிவிடைகள் அத்தனையும் செய்துவிட்டு வெளியே வந்தான். என்னுல் என்ன ஆகவேண்டும் என்று கேட்டான். அதற்கு சந்நியாசி இவ்வளவு ஞானம் நிரம்பப் பெற்ற நீங்கள் இந்த அருவருப்பான தொழிலை ஏன் செய்ய வேண்டும் என்று கேட்டார். செய்தொழில் எதுவும் அநாகரீகமானது அன்று. சிறுவயதில் பழகிய இத்தொழிலை பற்று அற்று செய்கிறேன். இல்லறக் கடமைகளையும் பெற்ருேரது கடமைகளையும் நன்ருகச் செய்து வருகிறேன். எனக்கு யோகம் தெரியாது. சந்நியாசி ஆனதும் இல்லை. என்னுடைய கடமைகளைப்

பற்றின்றிச் செய்து கொண்டிருந்த ஒரே காரணத்தினுலேயே இந்த உண்மைகளை எல்லாம் அறிந்து கொண்டேன் என்று கசாப்புக் கடைக்காரன் கூறினுன்.

காட்டிலே விறகுவெட்டிச் சீவனம் செய்கின்ற கணவனே தெய்வமெனப் போற்றிக் கருமமாற்றும் பெண் ஒருத்தி. கணவனின் இரு கால்களும் இழந்த நிலையில் கணவனைக் கூடையில் சுமந்து கருமமாற்றுகிருள். சீவனுேபாயம் காரணமாக கிராமம் கிராமமாக அலைந்து உடல்தொழில் செய்து கணவனைக் காப்பாற்றி வருகிருள். கிராமம் மாறும்போது கணவனைக் கூடையில் சுமந்து மறு கிராமத்திலுள்ள ஒரு மரநிழலில் இறக்கி விட்டு மலசலம் கழிக்கவிட்டு தேகசுத்தி செய்து முடிந்ததும் கிராமவேலை செய்து உணவைத் தேடிக்கொண்டுவந்து கணவனுக்கு உண்ணக் கொடுத்தபின் தானும் மிகுதியை உண்டு காலம் கழித்து வருகிருள். ஒரு நாள் சாயங்காலம் அடுத்த கிராமத்துக்கு தொழில் காரணமாக போகவேண்டி ஏற்பட்டதும் காலிழந்த கணவனை கூடையில் சுமந்து காட்டு வழியாக அடுத்த கிராமம் போகிருள். போகும் வழியில் காட்டு வழியில் துறவு பூண்டு தவஞ்செய்து கொண்டிருக்கும் சந்நியாசிமேல் தடக்கியதும் சாமர்த்தியத்தால் கீழே விழவில்லை. சந்நியாசிக்கு தனது தவத்தை கலைத்துவிட்டதால் ஆருக் கோபம் மூண்டதும் விடிவதற்குள் உமது கணவன் இறக்கக்கடவது எனச் சாபமிடுகிருர். மங்கைக்கு தனது கணவனை இழப்பதென்பது முடியக்கூடிய கருமமாய் தென்படவில்லை. ஆகவே விடியாமலிருக்கக் கடவது எனச் சாபமிடுகிருள். அப்போது தேவர்கள் எல்லாம் ஏன் விடியவில்லை எனக் கலங்குகிருர்கள். செய்வதறியாது திகைக்கிருர்கள். காரணம் சிறிது சிறிதாய் புலப்பட்டதும் மங்கையிடம் வருகிருர்கள். மன்னிப்புக் கேட்கிருர்கள். சாப விமோசனம் கிடைத்ததும் விடிகிறது. கடமையை மனச்சுத்தியுடன் செய்பவர்கள் நினைத்ததை அடைய முடியும் என்பது நிரூபணமாகிறது.

கசாப்புக் கடைக்காரனும் அந்தப் பெண்ணும் தங்கள் கடமைகளை முழுமனத்தோடும் மகிழ்வோடும் செய்தார்கள். அதன் பயனுக அறிவு விளக்கத்தை அடைந்தார்கள் செயல் வன்மையையும் மனப்பான்மையையும் பார்த்து ஒருவனை மட்டிட்டுக்

கொள்ளவேண்டும். செய்கின்ற தொழிலே வயிற்றுப் பிழைப்புக்கு என்பதை மறந்து ஈசுவர ஆராதனை என்று நினைத்துச் செய்தால் செய்யும் தொழில் தவமாக மாறிவிடும்.

நமக்கு வந்தமையும் கடமையை ஒழுங்காக நிறைவேற்றுவதே நம்கடன். பற்றற்ற கர்மயோகி கடமைகளில் ஏற்றத் தாழ்வைப் பார்க்கமாட்டான். தோட்டத் தொழில் செய்வதும் தெய்வத் திருப்பணி செய்வதும் கர்மயோகிக்கு ஒரே பாங்குடையவையாம்.

ஆகவே பற்றுக்களை அறவே நீக்கி அன்பினால் பணிசெய்து ஆண்டவனிடம் அடைக்கலம் புகுவதொன்றே நமது கடமை. நமக்கு என்று தனியான வேறு ஒரு காரியமும் இல்லை. உலக நடைமுறையைச் சரியாகப் பயன்படுத்துவதனாலேயே மனபரிபாகம் நம்மை வந்து அடைகிறது. மனபரிபாகம் வந்து அடைகின்றபோது மனம் பண்பட்டு விடுகிறது. பண்பட்ட மனத்திலே சுயநலத்தை மருந்துக்கும் காணமுடியாது.

சுயநலம் இல்லாதபோது முத்தி வந்தடைகின்றது. கருமத்தை முறையாகச் செய்வதன்மூலம் முத்தி அடைகின்றோம் என்றுதானே கர்மயோகம் புகட்டுகின்றது. இறைவனுடைய உண்மைத் தத்துவத்தோடு நம்மை இணைப்பது என்பது யோகம். மக்களின் பக்குவத்துக்கும் தகுதிக்கும் அமைய உள்ள யோகங்கள் நான்காகும். அவை கர்மயோகம், பக்தியோகம், இராசயோகம், ஞானயோகம் எனப்பெறும். தன் கருமங்களையும் கடமைகளையும் பற்றின்றிச் செய்வதன் மூலமாக இறை உணர்வினைப் பெற்றுக் கொள்ளுதல் கர்மயோகம். பயனைக் கருதிக் கருமம் செய்பவன் ஆகிவிடாதே. வாழ்விலே உலக விவகாரத்தை நடாத்திக்கொண்டே தன் உள்ளத்தை ஒருவன் பற்று அறச் செய்யவேண்டும் என்பதையே கர்மயோகம் புகட்டுகின்றது.

தர்மநெறியில் ஒருவன் நிற்கின்றான் என்றால் தனக்கு சமுதாயத்திலே இடப்பெற்ற வேலையை மனப்பூர்வமாக ஏற்று தன் கடமையைச் சரிவரச் செய்கின்றான் என்பதுதான் பொருள். பணத்துக்காகப் பணி ஆற்றுபவன் புகழுக்காகப் பாடுபடுபவன் ஆத்மதிருப்தியை அடைந்துவிட முடியாது. செய்யவேண்டிய கருமத்தைத் துறத்தல் ஒருபோதும் ஆகாது. அறிவீனத்தால் அதனை விட்டுவிடுதல் தாமத குணத்தால் ஏற்படுவதாகும்.

*வினை – கருமம் – தொழில் என்பன ஒரு கருத்துச் சொற்கள்,*

௭—

# விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு, பருத்தித்துறை.

விநாயகர் — பிள்ளையார், அறிவுப்பொருள், ௭— எண்களில் 3 கிரகங்களில் வியாழ பகவான், மனித அவயத்தில் வலக்கண் இவைகளைக் குறிக்கும்.

ஞாபகார்த்த நிதி — திரு. சி. ஆ. சிவக்கொழுந்து
திருமதி ஆ. சி. இராசம்மா
(வ. கோ. சரவணமுத்துவின் மகள்)
செல்வன் ஆ. சி. மு. சுப்பிரமணியன்

நோக்கம் — அறிவு வளர்ச்சிப் பணி
ஊனமுற்றோர் உதவிப் பணி
கரும யோகப்பணி

## தருமகர்த்தா சபை

திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை
நிறுவனர், நிர்வாகி, ஆயுட்காலத் தலைவர்

திரு. வ. கு. கணபதிப்பிள்ளை
B. A. (லண்.) சட்டத்தரணி, உப தலைவர்

திரு. வ.ச. செல்வராசா
செயலாளர் – பொருளாளர்

திரு. க. தங்கராசா
நிர்வாகப் பொறுப்பதிகாரி

கௌரவ உறுப்பினர்கள் :

திரு. அ. துரைசிங்கம்
திரு. க. வேதாரணியம்
திருமதி கோ. கண்மணி

கௌரவ உப உறுப்பினர்கள் :

திரு. வி. க. கேதீஸ்வரநாதன்
திரு. ஆ. க. சிவப்பிரகாசம்

ஸ்ரீ வாணி அச்சகம்,
இலக்கணவத்தை - உடுப்பிட்டி